(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 2(12).]

# பாராளுமன்றத்தின்
# 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2025 ஒக்தோபர் 10, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2025 ஒக்தோபர் 21, செவ்வாய்க்கிழமை
## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் விலைகுறித்தல் குழுவினதும், 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினதும் மற்றும் எல்லா அக்கறைகொண்டுள்ளோரினதும் கலந்தாலோசனையுடனும் மற்றும் 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுட்பட இயைபான வேறெல்லாக் காரணிகளையும் கவனத்துட்கொண்டும் 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 118(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆம் பிரிவின் கீழ் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 யூலை 21 ஆம் திகதிய 2446/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

## 2025 ஒக்தோபர் 23, வியாழக்கிழமை
## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்
**(2025 ஒக்தோபர் 23, வியாழக்கிழமை)**

1460/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்தச்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இலங்கை மின்சார சபையினை மறுசீரமைக்கும் செயன்முறையின் போது சுய விருப்பத்தின் அடிப்படையில் ஓய்வு பெறுவதற்கு கோரியுள்ள இலங்கை மின்சார சபையின் ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவி வாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) சுய விருப்பத்தின் அடிப்படையில் ஓய்வு பெறுவதற்கு கோரவில்லை எனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) சுய விருப்பத்தின் அடிப்படையில் ஓய்வு பெறவுள்ள ஊழியர்களுக்கு இழப்பீடுகளை செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி நிதியை பெற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிதி மூலங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1461/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் இலங்கைப் பிரசைகளுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை உறுதிப் படுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரையில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி சட்டத்தை வலுவூட்டுவதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி சட்டத்தின் மூலம் இலங்கைப் பிரசைகளுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை மேலும் வலுவூட்டுவதற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப் படவுள்ள சட்டரீதியான திருத்தங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2017 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரையில் இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ள மேன்முறையீடுகளின் எண்ணிக்கையும் அவற்றில் ஆணைக்குழுவினால் தீர்க்கப்பட்டுள்ள மேன்முறையீடுகளின் எண்ணிக்கையும் ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி மேன்முறையீடுகளில் இது வரையில் விசாரணை செய்யப்பட்டு நிறைவு செய்ய முடியாதுபோன மேன்முறையீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1462/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரகமவில் அமைந்துள்ள களுத்துறை மாவட்ட விளையாட்டுக் கட்டடத் தொகுதியின் (முன்னாள் ராஜா சமரநாயக்க விளையாட்டரங்கு) பராமரிப்பு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ் விளையாட்டுக் கட்டடத் தொகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பராமரிப்பு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) அதற்கென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி விளையாட்டுக் கட்டடத் தொகுதியின் பராமரிப்பு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக 2025 ஆம் ஆண்டில் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி மைதானத்தில் உள்ள 400 மீட்டர் ஓடுபாதையில் சுமார் 100 மீட்டர் நீளமான பகுதியில் மற்றும் மைதானத்தின் மத்தியில் பல பகுதிகளில் புற்கள் காய்ந்து கிரவல் மண் வெளிப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(vi) அவ்வாறாயின், அதனை மீளமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(vii) மைதானத்தினுள் மழை நீர் தேங்கி நிற்பதைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2025 நவம்பர் 08, சனிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

739/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு நகரின் மலக்கழிவகற்றல் அமைப்பினை முன்னேற்றுவதற்காக கொழும்பு மாநகர சபைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்ட நிதி மற்றும் அந்நிதியில் இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ள தொகை என்பன வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்ட நிதியில் ஒரு தொகை நிதி பயன்படுத்தப்படாமல் கொழும்பு மாநகர சபையால் வைப்பிலிடப் பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நிதி எவ்வளவு என்பதையும்;

(iv) அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1010/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை, கும்பல் வன்முறை அல்லது கும்பல் கொலைச் சம்பவங்கள் தொடர்பாக ஒவ்வொரு ஆண்டும் இலங்கைப் பொலிசில் பதிவுசெய்யப்பட்டுள்ள சம்பவங்களின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் அல்லது நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடுப்பு அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பான சட்டங்களின் கீழ் வழக்குத் தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும், மாகாண ரீதியாக வெவ்வேறாகவும்;

(ii) கும்பல் வன்முறை தொடர்பாக, இலங்கைப் பொலிசாருக்கும் உள்ளூர் நிர்வாகத்திற்கும் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைகள் உள்ளடங்கலாக அனைத்து மாகாணங்களிலும் சட்டங்களையும் சட்டச் செயன்முறைகளையும் சமச்சீராக அமுல்படுத்துவதை உறுதிப்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாதென்பதையும்;

(iii) கும்பல் வன்முறையால் பாதிக்கப்படக்கூடிய உயர் அபாயநேர்வுடைய ஏதாவது மாவட்டங்களை அல்லது பிரதேசங்களை அமைச்சு அடையாளம் கண்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அத்தகைய மாவட்டங்களில்/ பிரதேசங்களில் எதிர்காலக் கும்பல் வன்முறைச் சம்பவங்களைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1212/2025

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவில், பிரேம் கண்ட ஆற்றின் குறுக்காக பாலம் அமைக்கும் கருத்திட்டமும் ஹெட ஓயா ஆற்றின் குறுக்காக பாலம் அமைக்கும் கருத்திட்டமும் கடந்த அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டன என்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி பாலங்களை நிர்மாணிக்கும் கருத்திட்டங்களின் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி இரண்டு பாலங்களின் நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அந்த இரண்டு பாலங்களை நிர்மாணிக்கும் பணிகளை விசேட அபிவிருத்திக் கருத்திட்டத்தில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1467/2025

கௌரவ சானக மாதுகொட,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நெல் தவிர்ந்த ஏனைய களப்பயிர்களின் உற்பத்தி மற்றும் விளைதிறனை அளவிடப் பயன்படுத்தப்படும் அளவுகோல்கள் யாவையென்பதையும்;

(ii) தானிய வகைகள் மற்றும் கிழங்குப் பயிர் வகைகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி, எந்தெந்த தானிய வகைகளின் மற்றும் கிழங்குப் பயிர் வகைகளின் உற்பத்தியை அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது என்பதையும்;

(iv) 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2025, 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளில் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு தானிய வகை மற்றும் கிழங்குப் பயிர் வகையையும் உற்பத்திச் செய்வதற்கு எதிர்பார்க்கும் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1492/2025

கௌரவ சுனில் ரத்னசிறி,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கொவிட்-19 பெருந்தொற்று நிலவிய காலப்பகுதியில் மக்களுக்கு வழங்கப்பட்ட நிதி உதவிகளின் மொத்தப் பெறுமதி யாதென்பதையும்;

(ii) மேற்படி நிதி உதவியை வழங்குவதற்கு சமுர்த்தி அபிவிருத்தி நிதியத்தின் நிதி பயன்படுத்தப்பட்டதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நிதித்தொகை யாதென்பதையும்;

(iv) அந்நிதித்தொகை மீளச் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2025 நவம்பர் 10, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1085/2025

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்குப் புகையிரத வீதியின் வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரையான பகுதியிலுள்ள புகையிரதக் கடவைகள் பயன்படுத்த முடியாதவகையில் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளன என்பதையும்;

(ii) குறிப்பாக வவுனியா, புளியங்குளம் பிரதேசத்திலுள்ள புகையிரதக் கடவைகள் கடுமையாகச் சேதமடைந்துள்ளன என்பதையும்;

(iii) பெரும்பாலான புகையிரதக் கடவைகள் பாதுகாப்பற்றவையாக காணப்படுவதுடன் அவற்றினூடாகப் பயணிக்கும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வது அமைச்சின் பொறுப்பென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்ளவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி பிரச்சினை தொடர்பில் வழங்கப்படும் தீர்வுகள் யாவையென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1113/2025

கௌரவ ரொஷான் அக்மீமன,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் தற்போது கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு செலவிடப்படுகின்ற ஆண்டுக்கான மொத்த செலவினம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற விசேட கருத்திட்டங்கள் மூலம் ஈட்டப்படுகின்ற ஆண்டுக்குரிய வருமானம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1221/2025

கௌரவ சுரங்க ரத்னாயக்க,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலாவெவ புகையிரத நிலையம், இலங்கையின் மிகப் பழைமையானதொரு புகையிரத நிலையம் என்பதையும்;

(ii) கலாவெவ வாவி, அவுக்கண புத்தர் சிலை, கடவர கோவில், விஜித்தபுர ரஜ மஹா விஹாரை, துட்டகைமுனு மஹா விஹாரை மற்றும் சாமரகல ரஜ மஹா விஹாரை போன்ற பிரசித்திப்பெற்ற இடங்களைப் பார்வையிடுவதற்கு வருகைத் தருகின்ற பெருமளவிலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மேற்படி புகையிரத நிலையத்தைப் பயன்படுத்துகின்றார்கள் என்பதையும்;

(iii) ஆயினும், அங்கு புகையிரத ஆசனப் பதிவு வசதிகள் காணப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி புகையிரத நிலையத்துக்கு ஆசனப் பதிவு வசதிகளை வழங்க முடியுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த வசதிகள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி புகையிரத நிலையத்துக்கு தானியங்கி பணம் வழங்கும் இயந்திரமொன்றை (A.T.M) வழங்க முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1269/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கப் பாடசாலைகளில் பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்டு கைவிடப்பட்டுள்ள கட்டடங்கள் உள்ளதென்பதை அறிவாரா;

(ii) மேற்படி கட்டடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாண வாரியாக வெவ்வேறாக எத்தனை;

(iii) மேற்படி கட்டடங்களின் நிர்மாணப் பணிகள் தாமதமாவதற்கு ஏதுவான காரணங்கள் யாவை;

(iv) மேற்குறிப்பிட்ட கட்டடங்களில், 2025 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தில் நிரமாணப் பணிகளை நிறைவு செய்வதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ள கட்டடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாண வாரியாக வெவ்வேறாக எத்தனை;

(v) அக்கட்டடங்களின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படும் காலப்பகுதி யாது;

(vi) பகுதியளவில் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டடங்கள் காரணமாக பாடசாலை மாணவர்களுக்கும் பாடசாலை பணியாட்டொகுதிக்கும் ஆபத்தேற்படாத வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை;

(vii) மேற்படி கட்டடங்களைத் துரிதமாகவும் பாதுகாப்பாகவும் நிர்மாணித்து முடிப்பதற்கு பின்பற்றப்படும் செயன்முறை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1304/2025

கௌரவ (பேராசிரியர்) எல்.எம்.அபேவிக்ரம,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 'i-Road' கருத்திட்டத்தின் கீழ், மாத்தறை மாவட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட கிராமிய வீதிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் நீளம் கிலோமீற்றர்களில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த வீதிகளில், தற்போது அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள வீதிகளின் எண்ணிக்கை மற்றும் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ள வீதிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ள காரணத்தினால் போக்குவரத்து மிகச் சிரமமாகியுள்ள வீதிகளின் அபிவிருத்திப் பணிகளை நிறைவுசெய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2025 நவம்பர் 11, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1119/2025

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இராணுவம் சார்ந்த ஆட்சேர்ப்புகள் என்ற வகைப்படுத்தலின் கீழ் தொழில்சார் கடமைகளுக்காக, இன்றளவில் முப்படைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை ஒவ்வோர் இராணுவப் பிரிவுக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள தொழில்கள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய வகைப்படுத்தலின் கீழ் இவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) கடமைகளில் ஈடுபடுத்தப்படும்போது, மேற்படி வகைப்படுத்தலின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள இராணுவ அங்கத்தவர்களுக்கும் ஏனைய இராணுவ அங்கத்தவர்களுக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

(vi) ஏனைய இராணுவ அங்கத்தவர்களுக்கு உள்ளதுபோன்ற பதவிகளும் பதவி உயர்வுகளும், மேற்படி வகைப்படுத்தலின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற இராணுவ அங்கத்தவர்களுக்கு வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முப்படை மறுசீரமைக்கப்படுமாயின், மேற்படி வகைப்படுத்தலின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அங்கத்தவர்கள் நீக்கப்படுவார்களா என்பதையும்;

(ii) அது சம்பந்தமான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) முப்படை மறுசீரமைக்கப்படும்போது நீக்கப்படுகின்ற, நீக்கப்படவுள்ள மற்றும் ஓய்வெடுக்கச் செய்யப்படுகின்ற இராணுவ அங்கத்தவர்கள் சம்பந்தமான வேலைத்திட்டம் பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1182/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கு மாகாணத்திலுள்ள அரச துறை மற்றும் தனியார் துறை வங்கிகள், காப்புறுதி, நுண் நிதி மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அரச மற்றும் தனியார் துறை வங்கிகள் மற்றும் நுண் நிதி நிறுவனங்கள் கடன் வழங்கும்போது அறவிடும் வட்டி விகிதம் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நுண் நிதி நிறுவனங்களின் மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் காரணமாக நபர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திற்கமைய வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) அவர்களின் மரணங்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யாவர் என்பதையும்;

(iv) நுண்நிதி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்ற மனிதாபிமானமற்ற செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதற்காக எதிர்காலத்தில் மேற்படி நிறுவனங்களின் நடவடிக்கைகளை கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1315/2025

கௌரவ கே.காதர் மஸ்தான்,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா, பூந்தோட்டம் பிரதேசத்தில் 1458 எனும் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு கைத்தொழில் பேட்டை உள்ளது என்பதையும்;

(ii) அதில் ஒரு சில காணித் துண்டுகள் காடாக மாறியுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கைத்தொழில் பேட்டையில் உள்ள மொத்தக் காணித் துண்டுகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி காணித் துண்டுகளில் தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மற்றும் இதுவரை தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்படாதுள்ள காணித் துண்டுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) தற்போது தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகள் உரிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றனவா;

(iv) தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை பயன்படுத்தப்படாதுள்ள காணித் துண்டுகளை, பிற தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்க முடியுமா;

(v) ஆமெனில், அவ்வாறு வழங்கக்கூடிய காணித் துண்டுகளின் எண்ணிக்கை யாது;

(vi) தமது நிதியைப் பயன்படுத்தி, மேற்படி கைத்தொழில் பேட்டையினால் இறுதியாக அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை;

(vii) மேற்படி கைத்தொழில் பேட்டை உச்சளவு ஆற்றலுடன் இயங்கி வருகிறதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1404/2025

கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ப்ரோட்லேண்ட் நீர்மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) தற்போது மேற்படி நீர்மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் காரணமாக நட்டஈடு வழங்கப்படவுள்ள நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவர்களுள் இதுவரை முழுமையான நட்டஈட்டுத் தொகை செலுத்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை மற்றும் அத்தகைய ஒவ்வொரு நபருக்கும் வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேலும் நட்டஈடு வழங்கப்பட வேண்டிய எஞ்சியவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் செலுத்த வேண்டியுள்ள நட்டஈட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(v) அவர்களுக்கான நட்டஈடு செலுத்தி முடிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1428/2025

கௌரவ திலிண சமரகோன்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகளுக்கான உதிரிப் பாகங்களை மொத்தமாகக் கொள்வனவு செய்யும் முறையியல் யாதென்பதையும்;

(ii) மேற்படி முறையியலில் குறைபாடுகள் காணப்படுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

(iv) இவ்விடயம் தொடர்பில் குறைபாடுகள் காணப்படாத முறையியலொன்றை அறிமுகப்படுத்துவதற்கான இயலுமை காணப்படுகின்றதா என்பதையும்;

(v) உதிரிப் பாகங்கள் தொடர்பாக பின்பற்றுகின்ற இருப்புக் கட்டுப்பாட்டு முறையியல் யாது என்பதையும்;

(vi) மேற்படி முறையியல் எப்போதிருந்து பயன்படுத்தப்படுகின்றது என்பதையும்;

(vii) இருப்புக் கட்டுப்பாட்டிற்கான கணனி முறைமையொன்று தயாரிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 நவம்பர் 12, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1289/2025

கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி. சூரியபண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான மொத்தக் காணியின் அளவு, மாவட்ட வாரியாக வெவ்வேறாக எத்தனை ஏக்கர்கள் என்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளை தனிநபர்களுக்கு, அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு கையளிக்கும்போது செல்வாக்குச் செலுத்தும் சட்டங்கள் யாவையென்பதையும்;

(iii) ஆணைக்குழுவின் காணி கையளிப்புச் சான்றிதழ்கள் வகைப்படுத்தப் பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) வழங்கப்பட்டுள்ள கையுதிர்ப்புப் பத்திரமொன்றை இரத்துச் செய்யும் அதிகாரத்தை கொண்டவர் யாரென்பதையும்;

(v) காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிகள் தொடர்பான சட்டங்களை இற்றைப்படுத்துவதற்கான/ திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1312/2025

கௌரவ சுதத் பலகல்ல,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஒரு கிலோ கிராம் நெல்லை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச விலை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) தற்போது நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் நெல்லை ஏற்றிச் செல்லக்கூடிய எத்தனை லொறிகள் உள்ளன என்பதையும்;

(iii) இன்றளவில் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு சொந்தமான அரிசி ஆலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1323/2025

கௌரவ சுகத் வசந்த த சில்வா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாற்றுத்திறனுடைய மாணவர்கள் தமது கற்கை நெறிகளைத் தொடர்வதற்கான வசதிகள் அரச பல்கலைக்கழக கட்டமைப்பினுள் காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) பிரெய்லி முறை, சைகை மொழி மற்றும் உருப் பெருப்பிக்கப்பட்ட எழுத்துக்கள் உள்ளிட்ட மாற்றுத் தொடர்பூடகங்களை மேம்படுத்துவதற்குப் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) பரீட்சைகளுக்குத் தோற்றுகின்றபோது மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் யாவை என்பதையும்;

(v) பரீட்சைகளில் மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்கு அந்தந்த மாற்றுத்திறன் தன்மைக்குரியதாக நியாயமான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்கு ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் கணினிகளைப் பயன்படுத்தி பரீட்சைகளில் விடையளிப்பதற்கான வாய்ப்புக் கிடைக்கின்றதா என்பதையும்;

(vii) மாற்றுத்திறனுடைய மாணவர்கள் நூலகங்களைப் பயன்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை விரிவுபடுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரச பல்கலைக்கழகங்களில் மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்குப் போதுமான அணுகல் வசதிகள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(ii) இன்றேல், அணுகல் வசதிகளை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் அதற்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1347/2025

கௌரவ உபுல் கித்சிறி,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புராதன மடுவன்வெல வலவ்வ நிர்மாணிக்கப்பட்ட காலப்பகுதி யாதென்பதையும்;

(ii) அதன் வரலாற்று முக்கியத்துவம் யாதென்பதையும்;

(iii) மடுவன்வெல வலவ்வ தொல்பொருள் திணைக்களத்தால் சட்டரீதியாக கையகப்படுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) கையகப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அதன் உரிமையாளர் யாரென்பதையும்;

(v) கையகப்படுத்திய காணியின் விஸ்தீரணம் யாதென்பதையும்;

(vi) அற்காகச் செலுத்தப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தொல்பொருள் திணைக்களம் மடுவன்வெல வலவ்வவை கையகப்படுத்துதல் தொடர்பாக வெளியிடப்பட்ட முதல் வர்த்தமானப் பத்திரிகையின் இலக்கம் மற்றும் திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி வர்த்தமானப் பத்திரிகையினைத் திருத்தம்செய்து இரண்டாவது வர்த்தமானப் பத்திரிகையொன்று வெளியிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி வர்த்தமானப் பத்திரிகையின் இலக்கம் மற்றும் திகதி யாதென்பதையும்;

(iv) இரண்டாவது வர்த்தமானப் பத்திரிகைக்கு அமைவாக கையகப்படுத்திய காணியின் விஸ்தீரணம் யாதென்பதையும்;

(v) மேற்படி வர்த்தமானப் பத்திரிகைக்கு அமைவாக நீக்கப்பட்ட காணியின் விஸ்தீரணம் யாதென்பதையும்;

(vi) இது தொடர்பில் முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1477/2025

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் சகல உள்ளூராட்சி மன்றங்களும் வீதிகளுக்கு ஒளியூட்டும் தெரு விளக்குகளைப் பயன்படுத்துகின்றன என்பதையும்;

(ii) மின்சார சபை இதுவரை அதற்கு எவ்விதக் கட்டணங்களையும் அறவிடவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) வீதிகளுக்கு ஒளியூட்டும் தெரு விளக்குகளைப் பயன்படுத்துவதற்காக உள்ளூராட்சி மன்றங்களிடம் கட்டணத்தை அறவிடுவதற்கு இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பான அறவிடல் வழிமுறை யாதென்பதையும்;

(iii) மேற்படி அறவிடலின் காரணமாக குறைந்த வருமானத்தைப் பெறும் உள்ளூராட்சி மன்றங்கள் சிரமத்திற்குள்ளாவதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்குத் தீர்வு வழங்கப்படுமா என்பதையும்;

(v) ஆமெனில், அந்தத் தீர்வு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2025 நவம்பர் 13, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1350/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பராமரிக்கப்பட்டு வருகின்ற திருகோணமலை மாவட்டத்தின் வீதிகள் விஸ்தரிக்கப்பட வேண்டிய நிலையில் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) கிண்ணியா பிரதேசத்தின் சனத்தொகை மற்றும் அப்பிரதேசத்திற்கு வருகை தரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுப் பயணிகளின் எண்ணிக்கைக்கு அமைவாக, கிண்ணியா - கொழும்பு பிரதான வீதியை முன்னுரிமை வழங்கி விஸ்தரிக்க வேண்டும் என்பதையும்;

(iii) மேற்படி வீதிக்கு அருகே பாடசாலைகள் அமைந்துள்ளதுடன், கடும் வாகன நெரிசல் நிலவுவதையும், பாதசாரிகளுக்குப் போதுமான வசதிகள் இல்லை என்பதையும்;

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) கிண்ணியா – கொழும்பு பிரதான வீதியின் அகலம் யாது;

(ii) மேற்படி வீதி ஒரே திசையில் மாத்திரம் வாகனம் பயணம் செய்யக்கூடிய ஒருவழிப் பாதையா;

(iii) இன்றேல், இரு திசைகளிலும் வாகனம் பயணம் செய்யக்கூடிய இருவழிப் பாதையா;

(iv) மேற்படி வீதியை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா;

(v) ஆமெனில், உத்தேச வீதியின் நீளம் மற்றும் அகலம் யாது;

(vi) அதற்கென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள செலவினம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1352/2025

கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில், தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளையும், சட்டவிரோத மீன்பிடிப் படகுகளையும் பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அறிவாரா;

(ii) ஆமெனில், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) அதற்கான கண்காணிப்பு மற்றும் அமுலாக்கல் நடவடிக்கைகளை வலுவூட்ட எதிர்காலத்தில் அமுல்படுத்தப்படும் வேலைத்திட்டம் யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் —

(i) காரணமாக முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் மீன்பிடி உற்பத்தியின் தரம் தொடர்பில் ஏற்பட்டுள்ள தாக்கம் யாது;

(ii) இதன் காரணமாக மேற்படி மாவட்டங்களில் மீனவர்களின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள தாக்கம் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iii) மேற்படி விடயம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள சாதாரண மீனவர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தையும், அவர்களின் வருமானத்தையும் உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iv) இவ்விடயத்தைக் கட்டுப்படுத்துவதற்கு போதியளவில் சட்டம் அமுல்படுத்தப் படாமைக்கான காரணங்கள் யாவை;

(v) இதனைக் கட்டுப்படுத்துவதற்காக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு, இலங்கைக் கடற்படை மற்றும் இலங்கை பொலிசாருக்கிடையில் சிறந்ததொரு ஒருங்கிணைப்பு பேணிவரப்படுகின்றதா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1354/2025

கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார,— பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையிலுள்ள ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ஒவ்வொரு ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒரு குடும்ப அலகாகக் கருதும்போது ஓய்வுபெற்ற ஒருவரின் ஓய்வூதியமானது, தனிநபரின் நலன் என்பதை விடவும் பொது நலனாகக் கருதப்படுவதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) அதற்கமைய ஓய்வூதியதாரரொருவர் மரணித்ததன் பின்னர் அவருடைய ஓய்வூதியத்தை வழங்குவது தொடர்பாக பின்பற்றப்படும் நடைமுறைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1395/2025

கௌரவ எம்.எஸ் அப்துல் வாசித்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின், பொத்துவில் மற்றும் லாஹுகல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் பாரிய குடிநீர் தட்டுப்பாடு நிலவுகின்றதென்பதையும்;

(ii) மேற்படி குடிநீர் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காணும் நோக்கில் 2018, 2019, மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே 150 மில்லியன், 25 மில்லியன் மற்றும் 50 மில்லியன் ரூபாய் செலவிட்டு கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் 'ஹெட ஓயா' நீர் விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) குடிநீர் தட்டுப்பாட்டுக்கு தீர்வாக நடைமுறைப்படுத்தப்பட்ட மேற்படி கருத்திட்டத்தின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் வசிக்கின்ற மக்களின் குடிநீர் தேவைப்பாட்டை பூர்த்தி செய்ய முடியுமென்பதால் குறித்த கருத்திட்டத்தை மீள நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1434/2025

கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்தாமை தொடர்பாக 2024 ஒக்தோபர் மாதத்திலிருந்து தொழில் வழங்குநர்களுக்கு அறிவிக்க தொழில் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(ii) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்தாமை தொடர்பாக மிகைக் கட்டண விதிப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) நீண்ட காலமாக மிகைக் கட்டண அறவீட்டுச் செயற்பாட்டில் தாமதம் ஏற்பட்டிருப்பின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) 2019 உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல், கொவிட்-19 பெருந்தொற்று மற்றும் 2022 பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களால் சவாலுக்குட்பட்ட வணிகங்களுக்கு மிகைக் கட்டணம் விதிக்கின்றபோது நிவாரணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 நவம்பர் 14, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1451/2025

கௌரவ கே. இளங்குமரன்,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு கடவுச்சீட்டு வழங்குவதில் பெருமளவு தாமதம் காணப்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) இதன் விளைவாக, அவசரத் தேவைகள் ஏற்படும் போது அவர்களுக்கு விமானப் பயணங்களில் ஈடுபட முடியாதுள்ளமை பற்றி அறிவாரா என்பதையும்;

(iii) இத்தாமதத்தால் பாதிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நட்ட ஈடு அல்லது முன்னுரிமை வழங்கப்படுமா என்பதையும்;

(iv) மேற்படி, வெளிநாட்டு கடவுச்சீட்டு வழங்குவது தொடர்பான செயன்முறையை துரிதமாகவும் எளிதாகவும் மேற்கொள்வதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும்;

(v) தாமதங்களைக் குறைப்பதற்கு டிஜிட்டல் அல்லது உயிர் புள்ளியியல் (பயோமெற்றிக்) முறைகள் மீது கவனம் செலுத்தப்படுமா என்பதையும்;

(vi) துரித சேவையை வழங்குவது தொடர்பில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு தூதரகங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு எவ்வாறானது என்பதையும்;

(vii) இலங்கையர்கள் அதிக அளவில் வாழும் நாடுகளில் நடமாடும் சேவைகள் அல்லது நேரடி சேவைகள் அறிமுகப்படுத்தப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா;

(ஆ) (i) அவசர வழக்கு நடவடிக்கைகளுக்கு இலங்கை தூதரகங்களில் விசேட பிரிவுகள் நிறுவப்படுமா என்பதையும்;

(ii) வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்கான எதிர்கால வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1463/2025

கௌரவ (செல்வி) அம்பிகா சாமிவெல்,— சுற்றாடல் அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் வெட்டு மலர்கள் மற்றும் தாவர வகைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு மலர் வகையிலும் வருடாந்தம் இறக்குமதி செய்யப்படும் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) குறித்த மலர் வகைகளை இறக்குமதி செய்வதற்கு வருடாந்தம் செலவு செய்யப்படும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) இறக்குமதி செய்யப்படும் மலர் வகைகளை இலங்கையிலேயே வளர்ப்பதற்கான சாத்தியம் உள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1474/2025

கௌரவ லசித் பாஷண கமகே,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா மாவட்டப் பொது வைத்தியசாலையில் பணிபுரியும் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் ஒவ்வொரு பதவி வாரியாக நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையில் தரநிலைப்படுத்தப்பட்ட தரக் கட்டுப்பாட்டுடனான மருந்துக் களஞ்சியசாலையொன்று இல்லாமையை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், தரநிலைப்படுத்தப்பட்ட தரக் கட்டுப்பாட்டுடனான மருந்துக் களஞ்சியசாலையொன்றைத் தாபிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலையில் நாளாந்தம் மற்றும் மாதாந்தம் சிகிச்சைப் பெறும் நோயாளிகளின் எண்ணிக்கையின் சராசரிப் பெறுமானம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி வைத்தியசாலைக்கென முதன்மைத் திட்டமொன்று (Master plan) தயாரிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா என்பதையும்;

(v) அதற்கமைவாக, வைத்தியசாலை உச்ச வினைத்திறனுடன் இயங்கும் பட்சத்தில், எத்தனை நோயாளிகளுக்கு சேவை வழங்க முடியும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1493/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி கீதா ஹேரத்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 1989.07.11 ஆம் திகதிய, 566/5 இலக்க வர்த்தமானி அறிவித்திலின் பிரகாரம், பொல்பிதிகம பிரதேச செயலக பிரிவில், வனசீவராசிகள் பாதுகாப்பு மற்றும் வனப்பாதுகாப்புத் திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகளின் பரப்பளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த வர்த்தமானி வெளியிடப்பட்டபோது அக்காணிகளில் இருப்பாட்சிக் காணிகள், வதிவிடக் காணிகள் மற்றும் அரசாங்க அளிப்புப் பத்திர காணிகள் உள்ளடங்கியிருந்தனவா என்பதையும்;

(iii) அத்தகைய காணிகள் நிள அளவை செய்யப்பட்டு அடையாளங் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஹக்வட்டுனாவ நீர்த்தேக்கம் மற்றும் நீர்த்தேக்க ஒதுக்கங்கள் நில அளவை செய்யப்பட்டு எல்லைகள் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வர்த்தமானி வெளியிடப்பட்டதன் பின்னர் மேற்படி வனசீவராசிகள் வலயத்திற்கு பாதைகள், மின்சாரம் மற்றும் நீர் வசதிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) இந்த வலயத்திலுள்ள அரசாங்க பாடசாலைகள், கிராம உத்தியோகத்தர் அலுவலகங்கள், சிகிச்சை நிலையங்கள் மற்றும் விகாரைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) ஹேரத்கம வனப்பாதுகாப்பு அலுவலகத்தைச் சேர்ந்த அலுவலர்களினால் அரச காணிகள் (ஆட்சி மீளப் பெறுதல்) சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) தனி நபர்கள் இருப்பாட்சி கொண்டுள்ள / வதிகின்ற காணிகளை அவர்களுக்கே வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1497/2025

கௌரவ பீ.ஆரியவங்ஷ,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிங்கராஜ வனம், உலக மரபுரிமையாகப் பெயரிடப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அவ்வனத்திற்குரிய நிலப்பரப்பு எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கையின் சூழல் கட்டமைப்பின் நிலைபேறான தன்மைக்கு பேருதவியாக விளங்கும் சிங்கராஜ வனத்தின் உள்வாரி மற்றும் வெளிவாரி சூழல் கட்டமைப்பைப் பாதுகாப்பதற்காக இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2025 நவம்பர் 15, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

20/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் காணப்படும் மதுபானசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) மதுபானசாலைகளை தாபிக்கும் போது, அவற்றை விகாரைகள், பள்ளிவாசல்கள், கோயில்கள் மற்றும் பாடசாலைகள் போன்ற இடங்களிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட வேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளமையை அறிவாரா;

(iii) இன்றளவில் இத்தீர்ப்புக்கு ஏற்பவும் மற்றும் மாறாகவும் அமைக்கப்பட்டுள்ள மதுபானசாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

119/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சீனிக்காக விதிக்கப்பட்டிருந்த வரியைக் குறைப்பதற்கு அப்போதைய அரசாங்கம் தீர்மானித்த திகதி யாதென்பதையும்;

(ii) அத்தீர்மானத்தை மேற்கொள்வதற்கு தாக்கம் செலுத்திய காரணிகள் யாவை என்பதையும்;

(iii) சீனிக்காக விதிக்கப்பட்டிருந்த வரி குறைக்கப்பட்ட பின்னர் இலங்கைக்கு சீனியை இறக்குமதி செய்த நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானத்தால் இழக்கப்பட்ட வரி வருமானம் எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி சீனி வரி மோசடி தொடர்பில் இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

345/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பனையறுப்பான், பன்சேனை, வாதக்கல்மடு, பாவற்கொடிசேனை, உன்னிச்சை, நெடியமடு போன்ற பிரதேசங்களுக்கு இதுவரை குடிநீர் வசதிகள் வழங்கப்படவில்லை என்பதையும்;

(ii) உன்னிச்சையிலிருந்து பல்வேறு பிரதேசங்களுக்கு குடிநீர் கொண்டு செல்லப்பட்ட போதிலும், உன்னிச்சை மக்களுக்கு குடிநீர் வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு குடிநீர் வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) அப்பிரதேசங்களுக்கு குடிநீர் வசதிகள் வழங்கப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

562/2025

கௌரவ ரோஹண பண்டார,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்குரிய காணிகளின் மொத்த அளவு எவ்வளவென்பதையும்;

(ii) அத்தகைய காணிகள் தனியார் நிறுவனங்களுக்கும் தனிநபர்களுக்கும் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அக்காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி காணிகளை குத்தகைக்கு வழங்கியதன் மூலம் 2020 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை இலங்கை புகையிரதத் திணைக்களம் ஈட்டிய வருமானம், ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சட்டவிரோத குடியிருப்பாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள இலங்கை புகையிரத திணைக்களத்திற்குரிய காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி சட்டவிரோத குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு மேற்கொள்ளப் படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்குரிய காணிகளை இத்திணைக்களத்தின் நேரடி உரித்து மற்றும் கண்காணிப்பின் கீழ் பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

626/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— கமத்தொழில், கால் நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுக்காக சலுகை வட்டி வீத கடன் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்கும்போது கவனத்திற் கொள்ளப்படும் அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கடன் திட்டத்தின் கீழ் இன்றளவில் கடனைப் பெற்றுக்கொண்டுள்ள ஒவ்வோரு அரிசி ஆலை உரிமையாளரின் பெயரும் பெற்றுக் கொண்டுள்ள கடன் தொகையும் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(v) அத்தகைய அரிசி ஆலை உரிமையாளர்கள் பெற்றுக்கொண்டுள்ள கடன் தொகையை முறையாகப் பயன்படுத்தப்படுகின்றனரா என்பதை மேற்பார்வை செய்ய பின்பற்றப்படும் வழிமுறை யாவை என்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2025 நவம்பர் 17, திங்கட்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

204/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இஸ்ரேலுக்கான விமானப் பயணக் கட்டணம் குறைக்கப்பட்ட திகதி யாது;

(ii) குறைக்கப்பட்ட கட்டண அளவு எவ்வளவு;

(iii) தற்போது இஸ்ரேலில் பணியாற்றி வருகின்ற இலங்கையர்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி விமானப் பயணக் கட்டணங்கள் குறைக்கப்பட்ட போது பாரியளவில் மோசடி இடம்பெற்றுள்ளது என்பதை அறிவாரா;

(v) இது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

227/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 'வளமான நாடு-அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தின் ஊடாக தாபிப்பதாக வாக்குறுதியளிக்கப்பட்ட 'அரச சொத்துக்களை மீட்டெடுப்பதற்கான நிறுவனம்' தற்போது தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தின் மூலமாக களவாடப்பட்ட சொத்துக்களில் எந்தளவு சொத்துக்களை தற்போது அரசாங்கம் கையகப்படுத்தியுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்தில் தற்போது பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) 2025 ஆம் ஆண்டுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தினூடாக அல்லது இடைக்கால வாக்கு கணக்குப் பதிவு மூலமாக மேற்படி நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

464/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2021 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை இலங்கைக்கு மீன் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், 2021 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை, ஒவ்வோர் ஆண்டிற்குமாக வெவ்வேறாக, மீன்களின் வகை, அளவு, பெறுமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட நாடுகள் ஆகியவற்றையும்;

(iii) அத்தகைய இறக்குமதிகள் உள்ளூர் நுகர்வுக்காகவா அல்லது மீள் ஏற்றுமதிக்காகவா மேற்கொள்ளப்பட்டன என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2021 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை ஒவ்வோர் ஆண்டிற்குமாக —

(i) அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டது உள்ளூர் நுகர்வுக்காகவெனில், ஈட்டப்பட்ட தீர்வையின் பெறுமதி;

(ii) இறக்குமதி செய்யப்பட்டது மீள் ஏற்றுமதிக்காகவெனில், சேர்க்கப்பட்ட பெறுமதி மற்றும் ஈட்டப்பட்ட அந்நியச் செலாவணி;

(iii) இறக்குமதி செய்யப்பட்ட கருவாடு, நெத்தலி மற்றும் மாசி ஆகியவற்றின் அளவு, பெறுமதி மற்றும் அவை இறக்குமதி செய்யப்பட்ட நாடுகள்;

(iv) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட கருவாடு, நெத்தலி மற்றும் மாசி ஆகியவற்றின் அளவு;

(v) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தகரத்தில் அடைக்கப்பட்ட மீனின் அளவு மற்றும் பெறுமதி;

(vi) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட தகரத்தில் அடைக்கப்பட்ட மீனின் அளவு;

ஆகியவை யாவையென்பதை வெவ்வேறாக அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

662/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயர் பதவிகளில் உள்ள அரச உத்தியோகத்தர்களை ஓய்வில் அனுப்புகையில் அவர்களுக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆண்டு முதல் இற்றைவரை வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பதிரங்களின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதற்கு தகுதிபெறும் பதவிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட அனுமதிப்பத்திரங்கள் தற்போதும் வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

(ii) இன்றேல், அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iii) மேற்படி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நடவடிக்கை மீள ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(v) மேற்படி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டமையால் அனுமதிப்பத்திரங்கள் கிடைக்கப்பெறாத ஓய்வூதியதாரர்களுக்கு அந்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுமா என்பதையும்;

(vi) அவ்வாறெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1256/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்க காலப்பகுதியில், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மாதிவெல உத்தியோகபூர்வ இல்லங்களைத் தவிர அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களால் பயன்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அத்தகைய அரசாங்க உத்தயோகபூர்வ இல்லங்களின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(iii) அத்தகைய அரசாங்க உத்தயோகபூர்வ இல்லங்கள் குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் வேறு நிறுவனங்கள் அல்லது வணிக நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) இத்தகைய அரசாங்க உத்தியோகபூர்வ இல்லங்கள் வழங்கப்பட்டுள்ள தற்போதைய அரசாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 நவம்பர் 18, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

827/2025

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை வரையறுக்கப்பட்ட லிட்ரோ கேஸ் லங்கா கம்பனியினால் இறக்குமதி செய்யப்பட்ட எரிவாயுவின் அளவு ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி எரிவாயுவை இறக்குமதி செய்யும் போது முறையான பெறுகை நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

(iv) மேற்படி காலப்பகுதிக்குள் அவசரக் கொள்வனவு என்ற வகையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள எரிவாயுவின் அளவு ஆண்டுவாரியாக மெற்றிக் தொண்களில் வெவ்வேறாக யாது;

(v) அவசரக் கொள்வனவு மற்றும் சாதாரண பெறுகை நடைமுறைக் கொள்வனவு ஆகியவற்றுக்கிடையில் காணப்படுகின்ற நிதிசார் வித்தியாசம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

880/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2019.01.01 தொடக்கம் 2025.03.31 வரையில் மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் 'உருமய' அறுதி உறுதியை பெற்றுக்கொள்வதற்கு விண்ணபித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) கடந்த அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி காலப்பகுதியினுள் குறிப்பிட்ட நபர்களுக்கு 'உருமய' அறுதி உறுதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) 'உருமய' அறுதி உறுதியை பெற்றுக்கொள்ள விண்ணபித்தவர்களில் சிலருக்கு அந்த உறுதிகள் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) அவர்களுக்கு இதுவரை 'உருமய' அறுதி உறுதி வழங்கப்படாததற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1063/2025

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் இதுவரையில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள அரிசியின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி அரிசியின் வகைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒரு கிலோகிராம் அரிசிக்கு அறவிடப்பட்ட வரி எவ்வளவு என்பதையும்;

(iv) அதன் மூலம் ஈட்டிக்கொண்டுள்ள மொத்த வருமானம் எவ்வளவு என்பதையும்;

(v) இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் அரிசிக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) எதிர்காலத்தில் அரிசி இறக்குமதி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) அரிசி இறக்குமதியின் காரணமாக உள்ளூர் நெல் விவசாயிகளுக்கு ஏற்படும் தாக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் அரிசி இறக்குமதியைக் குறைப்பதற்காக நடைமுறைப் படுத்துவதற்கு எதிர்பார்க்கின்ற தேசிய வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1244/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் காணப்படுகின்ற வனசீவராசிகள் வலயங்கள் மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வனசீவராசிகள் வலயத்துக்குரிய காணியின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வனசீவராசிகள் வலயங்களில் வனசீவராசிகளுக்காக காணப்படுகின்ற குளங்கள், அணைக்கட்டுகள் மற்றும் ஏரிகள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், வனசீவராசிகள் வலய வாரியாக அவற்றின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(v) மேற்படி வனசீவராசிகள் வலயங்களில் இன்றளவில் புனரமைக்கப்பட்டுள்ள அல்லது நிர்மாணிக்கப்பட்டுள்ள குளங்கள், அணைக்கட்டுகள் மற்றும் ஏரிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் விஞ்ஞானபூர்வமாக இனங்காணப்பட்டுள்ள காட்டு யானை வழித்தடங்கள் யாவை என்பதையும்;

(ii) அவற்றை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இன்றளவில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள காட்டு யானை வழித்தடங்கள் யாவை என்பதையும்;

(iv) இனங்காணப்பட்டுள்ள காட்டு யானை வழித்தடங்கள் இதுவரை வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1431/2025

கௌரவ அஜித் கிஹான்,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒரே பண்டம் சந்தையில் வெவ்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றது என்பதையும்;

(ii) தரமற்ற உணவுகள் மற்றும் நுகர்வுப் பொருட்கள் விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு உள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுகள் மற்றும் பண்டங்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2025 நவம்பர் 19, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

819/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட ரங்கிறி தம்புளை பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பாரியளவிலான பல மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்பதை அறிவாரா;

(ii) மேற்படி மோசடிகளின் தன்மை யாது;

(iii) மேற்படி மோசடிகள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

853/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையில் பதிவான பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டுவாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறைச் சம்பவங்களைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறைச் சம்பவங்கள் தொடர்பிலான சட்ட நடவடிக்கைகளை துரிதமாக செயற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1270/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் மூன்று பிரதான ஏற்றுமதிப் பயிர் வகைகள் யாவை என்பதையும்;

(ii) பிரதான ஏற்றுமதிப் பயிராக தென்னை அறிவிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iii) இலங்கையில் காணப்படுகின்ற தென்னை மரங்களின் எண்ணிக்கை மற்றும் தெங்கு பயிரிடப்பட்டுள்ள நிலப்பரப்பு ஹெக்டயார்களில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) இலங்கையில் தேங்காய் விளைச்சலை அதிகரிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தெங்கு சார்ந்து இலங்கையில் இன்றளவில் நடைமுறையிலுள்ள கைத்தொழில்கள் யாவை என்பதையும்;

(ii) தெங்கு சார்ந்த உற்பத்திகள் மூலம் இலங்கைக்குக் கிடைக்கும் வருடாந்த வெளிநாட்டுச் செலாவணி அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) தேங்காய் மட்டை சார்ந்து இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கைத்தொழில்களின் எண்ணிக்கை, அவற்றின் பிரதான ஏற்றுமதி உற்பத்திகள் மற்றும் உருவாக்கப்பட்டுள்ள நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) தேங்காய் மட்டைக் கைத்தொழில் சார்ந்து எழுந்துள்ள முக்கியமான பிரச்சனைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1295/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2000 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க (கூட்டிணைத்தல்) சட்டத்தின் பிரகாரம், வறிய பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக நலன்களை மேம்படுத்தும் நோக்கில் 'ரெஜீ ரணதுங்க கல்விசார் புலமைப் பரிசில் நிதியம்' ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்;

(ii) கம்பஹா மாவட்டத்தில், மினுவங்கொட, பன்சில்கொட கிராம அலுவலர் பிரிவிலுள்ள 100 பேர்ச்சஸ் பரப்பளவு கொண்ட காணி, 2003.04.07 ஆம் திகதி அந்நிதியத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது என்பதையும்;

(iii) 2005 ஆம் ஆண்டு, மேற்படி காணியில் கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டு, தொழிற்பயிற்சி நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டதுடன், 2021 ஆம் ஆண்டு அந்நிலையம் மூடப்பட்டது என்பதையும்;

(iv) 2023 ஆம் ஆண்டு, அக்கட்டடத்தை உடைத்தகற்றி, மேற்படி காணியைச் சுற்றி கம்பி வேலி அமைத்து, வாயிற்கதவை பொறுத்தியது மாத்திரமன்றி அக்காணியில் தென்னங் கன்றுகளையும் நாட்டி அதனை தனியார் உடைமை கொள்வதற்கான நடவடிக்கைகள் மோசடியான முறையில் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி காணியை பொது மக்களின் பொதுப் பயன்பாட்டுக்காக, பொருத்தமான அரச நிறுவனமொன்றிடம் கையளிப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1336/2025

கௌரவ லால் பிரேம்நாத்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணி சீர்திருத்த ஆணைக்குழு தாபிக்கப்பட்டமைக்கான நோக்கம் தற்போது நிறைவேறியுள்ளதா என்பதையும்;

(ii) அந்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான அனைத்து காணிகளினதும் மொத்த அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) அரசாங்க காணிகளை தம்வசம் கொண்டுள்ள அரசாங்க நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) அந்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் சொந்தமான காணிகளில் வேறு தரப்பினருக்கு கையுதிர்க்கப்பட்ட காணிகளின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2026 ஜனவரி 09, வெள்ளிக்கிழமை
# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 3/ 2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேசிய விளையாட்டு அணியொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு விளையாட்டுத்துறைக்குரிய ஏதேனும் பட்டப் பாடநெறியைப் பயில்வதற்கு வாய்ப்பினை வழங்குதல்,— இலங்கையில் ஏதேனுமொரு தேசிய விளையாட்டு அணியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு அவர்களின் அடிப்படை கல்வித் தகைமைகள் அல்லது Z-புள்ளிகளின் மீது அடிப்படையாக அமையாமல் விளையாட்டுத்துறைக்குரிய எந்தவொரு பட்டப் பாடநெறியைப் பயில்வதற்குத் தேவையான சட்ட மற்றும் உயர் கல்விக் கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.4/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் சகல கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றுதல்,— இலங்கையின் கல்வித் தரத்தை முன்னேற்றமடைந்த சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுவருவதன் பொருட்டு பாடசாலைக் கட்டமைப்பைச் சேர்ந்த சகல ஆசிரியர்களையும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றியமைக்க வேண்டியுள்ளதாலும், தற்போது பெரும்பாலான ஆசிரியர்களுக்கு மூன்றாண்டு கால கோட்பாட்டு மற்றும் செய்முறை ரீதியான பாடநெறியின் இறுதியில் உயர் டிப்ளோமா கிடைப்பதாலும், மூன்றாண்டு கால கோட்பாட்டு ரீதியான பாடநெறி மற்றும் பாடசாலையை மையப்படுத்திய ஓராண்டு கால பயிற்சியுடன்கூடிய நான்காண்டு கால பட்டப்படிப்பு பாடநெறியை அளிப்பதற்கேற்ற வகையில் தற்போது இயங்கி வரும் 19 கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றியமைப்பதற்கு அப்போதைய கல்வி அமைச்சரினால் 2020 பெப்ரவரி 13 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.5/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 6/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடித்தல்,— இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அதிகூடிய வருமானத்தை ஈட்டித்தருகின்ற புகையிரதப் பாதையாக களனிவெளி புகையிரதப் பாதை கருதப்படுவதாலும், இப் புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதனால் இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, பதுளை உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதன் நன்மைகளை அனுபவிக்க முடியுமென்பதாலும், களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 8/ 2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 9/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.10/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.16/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை வெளிநாட்டு சேவைக்கான நியமனங்கள் வழங்கப்படுவதை முறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் நற்பெயரை சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மேலோங்கச் செய்யும் வெளிநாட்டு சேவைக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அரசியல் நியமனங்கள் காரணமாக அச்சேவையின் தரம் வீழ்ச்சியடைந்து எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போயிருப்பதால் அந்த நிலைமையைத் தவிர்க்கும் வகையில், வெளிநாட்டு சேவைக்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நியமனங்களையும் போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் மற்றும் திறமையின் அடிப்படையில் மேற்கொள்வதற்கான வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையான பெறுகை முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையானதொரு பெறுகை முறையியல் இன்மையே இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊழல் நிலைமைக்கு பிரதான காரணம் என்பதால் இந்நிலைமையைத் தடுப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான பெறுகை முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.18/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் தொடர்பில் பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பாரம்பரிய பல்கலைக்கழக கட்டமைப்புக்கு அப்பால், தொழிற்சந்தை மற்றும் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பத்தை இலக்காகக் கொண்ட வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் பாடநெறிகள் குறித்து பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.20/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகளுக்குரிய விடயப்பரப்பை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்பத் தயாரித்தல்,— தற்போது மாகாண சபைகளுக்குரிய விடயப் பரப்புக்கள் எவ்வித விஞ்ஞான ரீதியான அடிப்படையுமின்றி ஒதுக்கப்பட்டுள்ளதாலும், அதனால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாலும் இவ்விடயத்தை நிவர்த்தி செய்வதற்காக அவ்விடயப்பரப்புகளை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்ப ஒதுக்குவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.21/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்து சபையை வலுப்படுத்துவதற்காக உரிய முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பொதுப் போக்குவரத்துச் சேவையை வலுப்படுத்துவது அத்தியாவசியமான விடயமாக அமைவதால், இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்படும் போது இடம்பெறும் ஊழல் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்காக அரசாங்கம் உரிய முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 22/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்தல்,— வருடாந்தம் பால் இறக்குமதி செய்வதற்காக அதிகளவான அந்நியச் செலாவணி செலவிடப்படுவதால் அதனை தடுக்கும் வகையில் இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 26/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையிலுள்ள விளையாட்டு அமைப்புக்களை அரசியல் மயமாக்கலில் இருந்து விடுபடச் செய்தல்,— விளையாட்டு அமைப்புக்கள் இலங்கையில் பெருமளவில் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளன என்பது தெளிவாகப் புலப்படுவதன் காரணமாக, தேர்தலில் தேர்வு செய்யப்பட்ட அரசியல்வாதிகள் விளையாட்டு அமைப்புகளில் போட்டியிடுவதிலிருந்தும் தலைமைப் பதவிகளை வகிப்பதிலிருந்தும் தடை செய்யப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 30/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— இனங்களின் அல்லது மதங்களின் அடிப்படையில் அரசியல் கட்சிகளுக்குப் பெயரிடுவதைத் தடை செய்தல்,— இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, இனங்களை அல்லது மதங்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் கட்சிகளுக்குப் பெயரிடல் தடைசெய்யப்பட வேண்டும் என்றும், இனங்களை அல்லது மதங்களைக் குறிக்கும் பெயர்களைக் கொண்டு தற்போது செயற்படும் அரசியல் கட்சிகளின் பெயர்களிலிருந்து அத்தகைய மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 31/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கம் தொடர்பில் ஊழியர்களுக்கு 1% வீத இலாபத்தைச் செலுத்துதல்,—அரசாங்கத் தாபனங்களினால் நிர்வகிக்கப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியன வருடாந்தப் பணவீக்க வீதத்தினை விடக் குறைந்தபட்சம் 1% அதிகமான இலாபம் ஊழியர்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 32/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரஜைகளுக்கு இலவசப் பயண வசதிகள் பெற்றுத்தரல்,— அனைத்து சிரேஷ்ட பிரஜைகளுக்கும் பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் இலவசப் பயண வசதிகள் வழங்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 33/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— புலம்பெயர்ந்த ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை களுக்குத் தீர்வு காணச் சட்ட அதிகாரங்களுடன் அலகு ஒன்றைத் தாபித்தல்,— தாக்குதல், கடத்தல், கற்பழிப்பு, பாலியல் துஷ்பிரயோகம், கொலை மற்றும் நிதி மோசடி உள்ளிட்ட புலம்பெயர்ந்த ஊழியர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை ஆராய்வதற்கும், ஊழியர்கள் பாதுகாப்பாக இலங்கைக்குத் திருப்புவதற்குத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்யவும் மற்றும் அவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளவும் சட்ட அதிகாரங்களுடன் அலகு ஒன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 34/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தும் தேசிய வேலைத்திட்டத்தை உருவாக்குதல்,— பல்வேறு திறன்களைக் கொண்ட புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தி அவர்களின் திறன்கள் மற்றும் படைப்புகளை மேம்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 35/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் கைத்தொழிலதிபர்களுக்கு வரிச் சலுகை,— சர்வதேச சந்தைக்கான பொருட்களை உற்பத்தி செய்வதில் 75% க்கும் அதிகமான உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் உள்நாட்டுக் கைத்தொழிலதிபர்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரிச் சலுகை வழங்கப்பட வேண்டும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 36/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்குரிமையை வழங்குதல்,— வாக்குரிமையை இழந்த பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதனால், பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு தனிநபரும் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும் என்றும், தேர்தல் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்பட்டதன் பின்னரும் வாக்களிக்காத நபருக்கு அபராதம் விதிக்கப்பட வேண்டும் என்றும், இம்முறையானது அதிக பங்கேற்புமிக்க ஜனநாயகச் செயன்முறையை உருவாக்க உதவும் என்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 39/2025

கௌரவ லால் பிரேமநாத்,— அடிமட்டத்தில் செயற்படும் நாட்டிலுள்ள சகல உள்ளூராட்சி அதிகாரசபைகள் தொடர்பிலும் மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை தணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்,— மக்களுக்கு மிக நெருக்கமான மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களாக காணப்படுகின்ற அடிமட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பிலும் பெரும்பாலும் மக்கள் அதிருப்தியான நிலையில் இருப்பதால் இந்நிறுவனங்கள் தொடர்பாக மேலதிக அவதானம் செலுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 41/2025

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான வேலைத்திட்டத்தைத் தயாரித்தல்,— சமகாலத்தில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் சம்பந்தமாக சமூகத்தில் பாரியதொரு சொல்லாடல் உருவாகியுள்ளதாலும், நிறுவனத்தின் நிர்வாகிகள் தெரிவின் போது குறித்தவொரு சங்கத்தைச் சேர்ந்த குழுவினர் வசம் கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரம் இருப்பதால் முறைகேடுகள் அதிகளவில் இடம்பெறும் நிறுவனமாக அது மாறியுள்ளதாலும், அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 43/2025

கௌரவ ரோஹண பண்டார,— பேராசிரியர் பதவிகள் மற்றும் கலாநிதி பட்டங்களை தவறாக பயன்படுத்துவதை தடுப்பதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— தற்போது எமது சமூகத்திலுள்ள அநேகமானோர் பேராசிரியர், கலாநிதி போன்ற பதவிகளையும், பெயர்களையும் தவறான முறையில் பயன்படுத்தி வருவதனால், அதனை தடுக்கும் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 44/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பான 2023 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுகளை அமுல்படுத்தல்,— இலங்கைப் பொருளாதாரத்தின் இதயத்தைப் போன்றுள்ள இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பாக மிக முக்கியமான சிபாரிசுகள் தேசிய கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதனால் மேற்படி சிபாரிசுகளை அமுல்படுத்த முறையான வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 45/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் சேவைக்காக முறையாக நிதியைப் பயன்படுத்துதல்,— இன்றளவில் அனேகமான உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது நிதியை உரிய முறையில் செலவிட்டு பொது மக்கள், சுகாதாரம், பொதுச் சேவைகள் மற்றும் வீதி அபிவிருத்தி பணிகளையும் மேற்கொள்ளாது இலாபம் ஈட்டும் நோக்கில் நிலையான வைப்பு கணக்குகளில் வைப்பிலிடுவதாக தகவல் அறியக்கிடைத்துள்ளமையால் இந்நிலையை தடுப்பதற்கு அரசாங்கத்தினால் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கமைப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.48/2025

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பெற்றோலியம், எரிபொருள் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்களை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்தலின் கீழ் கொண்டு வருதல்,— மின்சாரம், பெற்றோலியம், எரிபொருள் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்களை ஒழுங்குபடுத்த வேண்டியிருப்பினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஆகியவற்றை மேற்பார்வை செய்வதற்கு ஏற்புடைய சட்டங்கள் திருத்தப்படாத காரணத்தினால், 21 ஆண்டுகளுக்கும் அதிகமாக பெற்றோலியம் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்கள் ஒழுங்குபடுத்தப் படாமலிருக்கும் நிலையை மாற்றுவதற்காக ஏற்புடைய சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.49/2025

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையை ஒழுங்குபடுத்துவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையானது முறையற்ற வகையில் காணப்படுவதால், அதனை முறைப்படுத்துவதற்கான ஒழுங்குபடுத்தல் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.50/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— பைனஸ் செய்கையால் நீர் மூலங்கள் மற்றும் சூழலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களைத் தடுப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— விசேடமாக ஊவா மாகாணம் உட்பட மலையகப் பிதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பைனஸ் செய்கையால் நீர் மூலங்களுக்கும் சூழலுக்கும் ஏற்படும் பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு, அவற்றை அகற்றி, பயன்தரு உள்நாட்டு பயிர்ச்செய்கைகளை முன்னெடுப்பதற்கான முறையியலொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 51/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகள் பீடத்தினைத் தாபித்தல்,— ஆசிரியர்களுக்குச் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிப்பதற்காகத் தேசிய மொழிகள் பீடம் ஒன்று தாபிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 52/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— நுண் நிதிக் கடன்களைப் பெற்று அக்கடன்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— நுண் நிதிக் கடன்களைப் பெற்றுக் கொண்டவர்களுள் பெருமளவானவர்கள் தற்போது அக்கடன்களால் பாதிக்கப்பட்ட நபர்களாக இருப்பதனால், மேற்படி நபர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 53/2025

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தொலைக்காட்சி நாடகக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கும் மேற்படி கைத்தொழில் துறையை ஒழுங்குறுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல், — மக்களுக்கு கேளிக்கையை அளிக்கும் பிரதான கைத்தொழில் துறையாகிய தொலைக்காட்சி நாடகக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்காகவும் மேற்படி கைத்தொழில் துறையை ஒழுங்குறுத்துவதற்காகவும் ஒழுங்குறுகை நிறுவனமொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 54/2025

கௌரவ லால் பிரேமநாத்,— உள்ளூராட்சி மன்றங்களில் பாரியளவில் பொது நிதியைத் துஷ்பிரயோகம் செய்தவர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுத்தல்,— கடந்த காலங்களில் இலங்கை முழுவதுமுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் பொது நிதியானது பாரியளவில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் துரித விசாரணைகளை மேற்கொண்டு அதனுடன் தொடர்புடைய சகல அலுவலர்களுக்கும் நிலவும் சட்டத்தின் பிரகாரம் தண்டனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 55/2025

கௌரவ உபுல் கித்சிறி,— இரத்தினபுரி மாவட்டத்தில் கொலொன்ன பிரதேச செயலகத்திற்குரிய மடுவன்வெல பிரபுமனை (வலவ்வ) முதற்கொண்டு இலங்கையில் புராதன பெறுமதி வாய்ந்த தலங்களைப் பாதுகாத்தல்,— இரத்தினபுரி மாவட்டத்தில் கொலொன்ன பிரதேச செயலகத்திற்குரிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமான மடுவன்வெல பிரபுமனை முதற்கொண்டு இலங்கையில் பெரும் எண்ணிக்கையிலான புராதன பெறுமதி வாய்ந்த தலங்கள் காணப்படுவதாலும், இத்தலங்கள் சுற்றுலா ஈர்ப்பைக் கொண்டுள்ளதாலும், தற்போது இவை கடுமையாக பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுவதாலும், இவற்றின் மரபார்ந்த தொன்மைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பேணிப் பாதுகாத்து அத்தகைய தலங்களுக்குச் சொந்தமான காணிகளை துரிதமாக அளவை செய்தும் நிர்ணயம் செய்தும் எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாத்து சுற்றுலாக் கைத்தொழிலுக்காகப் பயன்படுத்த அவற்றைப் பாதுகாக்கும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 56/2025

கௌரவ உபுல் கித்சிறி,— உடவளவை பிரதேசத்தை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்தல்,— உடவளவை தேசியப் பூங்கா, உடவளவை யானைகள் சரணாலயம், சங்கபால ரஜமகா விகாரை, உடவளவை நீர்த்தேக்கம், செவனகல சீனித் தொழிற்சாலை, செவனகல கரும்பு ஆராய்ச்சி நிலையம், உடவளவை நன்னீர் மீன்பிடி நிலையம் மற்றும் வவுல்பன சுண்ணாம்புக்கல் குகை முதலிய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய இடங்கள் காணப்பட்ட போதிலும், முறையான ஒரு வேலைத்திட்டம் இன்மையாலும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அவற்றின் பெறுமதியைக் கண்டுகளிக்க முடியாதிருப்பதாலும் இரத்தினபுரி மாவட்டத்தின் உடவளவை மற்றும் மொனராகலை மாவட்டத்தின் செவனகல ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாக உடவளவை பிரதேசத்தை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்துவதற்கு அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.57/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— "இலங்கைப் பைத்துல்மால் நிதியம்" என்ற பெயரில் நிதியமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களின் கல்வி, கலாசாரம், தொழில் மற்றும் இனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அன்றாட வாழ்வாதாரத்தைப் பூர்த்திசெய்யத் தேவையான ஒரு நிதியம் தற்சமயம் முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் இல்லாமையினாலும், இவ்வாறான தேவைகளுக்காக "பைத்துல்மால்" என்ற பெயரிலான நிதியம் உலகிலுள்ள முஸ்லிம் நாடுகள் மற்றும் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்கின்ற நாடுகளில் பல ஆண்டுகாலமாக இயங்கிவருவதாலும், இலங்கையில் இவ்வாறானதொரு நிதியம் ஆரம்பிக்கப்படுமானால் அதற்குத் தேவையான நிதியை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிப்பவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென்பதாலும், முஸ்லிம் சமய, கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் "இலங்கைப் பைத்துல்மால் நிதியம்" என்ற பெயரில் நிதியமொன்றைத் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 58/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ,— பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, தொழில் அபிவிருத்தி மற்றும் தனிநபர் சமூக அபிவிருத்தியின் பொருட்டு ஒவ்வொரு பாடசாலைக்கும் பயிற்றப்பட்ட உளவள ஆலோசகர் (Student Counsellor) ஒருவரை நியமித்தல்,— தற்போது பெரும்பாலான பாடசாலை மாணவர்கள் மத்தியில் பல்வேறு உளவியல் சார்ந்த பின்னடைவுகள் காணப்படுவதனாலும், இந்த நிலைமைகள் அவர்களின் உடல் மற்றும் சமூக இருப்பில் மறைமுகத் தாக்கத்தை ஏற்படுத்துவதனாலும், சில சந்தர்ப்பங்களில் பாடசாலைகளுக்கென பாடசாலை உளவள ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், மேற்படி பதவியில் பாடசாலை ஆசிரியர்களின் வகிபாகமும் உள்ளடங்குவதன் காரணமாக இதன் ஊடாக எதிர்பார்க்கப் படுகின்ற சேவைகள் பயனுறுதிமிக்கவாறு கிடைக்கப்பெறாமையினாலும், சகல பாடசாலை களிலும் உளவள ஆலோசகர் ஒருவரின் அவசியத்தன்மை எழுந்துள்ளதனாலும், பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, தொழில் அபிவிருத்தி மற்றும் தனிநபர் சமூக அபிவிருத்தியின் பொருட்டு ஒவ்வொரு பாடசாலைக்கும் பயிற்றப்பட்ட உளவள ஆலோசகர் ஒருவரை நியமனஞ் செய்யத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 59/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— "ரட்டவிருவன்" (புலம்பெயர் வீரர்கள்) என்றழைக்கப்படும் இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டமொன்றை வகுத்தல்,— இலங்கையின் தேசியப் பொருளாதாரத்தை உயிரூட்டுவதற்காக புலம்பெயர் தொழிலாளர்களால் வழங்கப்படும் பங்களிப்பு மிகவும் விசேடமானது என்பதனாலும், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வெளிநாடுகளில் பல வருட காலமாக தொழில் செய்த பின்னர் இலங்கைக்கு மீண்டும் வந்து தமது பிள்ளைகளுடன் சேர்ந்து வாழ்கின்றபோது ஒரு சில சந்தர்ப்பங்களில் மீண்டும் அவர்களுக்கு தொழில் புரிவதற்கான ஆற்றல் இல்லாததன் காரணமாக பல்வேறு சிக்கல்களுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுவதனாலும், அரசாங்கம் அவர்களிடமிருந்து அந்நியச் செலாவணியாக கிடைக்கப் பெறுகின்ற நிதியிலிருந்து குறித்ததொரு சதவீதத்தைப் பயன்படுத்தி ஓய்வூதிய நிதியமொன்றைத் தாபித்து, ஓய்வூதியத் திட்டமொன்றை வகுக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 60/2025

கௌரவ லால் பிரேமநாத்,— இளம் பிள்ளைகள் தற்கொலை செய்துகொள்வதைத் தடுத்தல்,— கடந்த காலத்தில் பாடசாலை ஒவ்வொன்றிலும் உளவள ஆலோசனைக்கான ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல், ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் உளவள ஆலோசனைக்கான பிரிவொன்றை நிறுவுதல், மாவட்டச் செயலகம் ஒவ்வொன்றிலும் உளவள ஆலோசனைக்கான அலகு ஒன்றை நிறுவுதல், அரசாங்க மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களில் உளவள ஆலோசனைக்கான டிப்ளோமா கற்கைநெறிகள், பட்டப் படிப்பு கற்கைநெறிகள் மற்றும் பட்டமேற்படிப்பு கற்கைநெறிகளைப் போதித்தல், மன அழுத்தத்திற்குத் தீர்வுகாண ஒவ்வொரு பிரதான வைத்தியசாலையிலும் உளவியல் மருத்துவப் பிரிவுகளை ஆரம்பித்தல் போன்றவற்றால் இளம் பிள்ளைகள் தற்கொலை செய்துகொள்வதைத் தடுக்க மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி அடைந்துள்ளதால் அரசியல் அதிகாரத்தார், அரசாங்க அலுவலர்கள், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் பொதுமக்கள் அத்தகைய செயற்பாடுகளில் தீவிரமாக இடையீடு செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 61/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— இலங்கையின் பாடசாலைக் கட்டமைப்பிலுள்ள உணவகங்களில் மாணவர்களுக்கு பாதகமான உணவு வகைகளை விற்பனை செய்வதை நிறுத்துவதற்கான வழிமுறையொன்றை உருவாக்குதல்,— இலங்கையின் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நீரிழிவு நோய் பரவலாக கண்டறியப்பட்டுள்ளதாக விசேட மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளதாலும், நீரிழிவு நோய்க்கு உணவு வகைகளுடன் உணவுப் பழக்கம் மற்றும் உணவு முறை ஏதுவாக உள்ளதாலும், இலங்கையின் பாடசாலை கட்டமைப்பில் அமைந்துள்ள பாடசாலை உணவகங்களில் நீரிழிவு நோய்க்கு காரணமாகவுள்ள சீனி மற்றும் மா கலந்த உணவுகளுடன் பிரைட் ரைஸ், கொத்து, துரித நூடில்ஸ் போன்ற உணவு வகைகள் பெருமளவில் மாணவர்களுக்கு விற்கப்படுவதாலும், எமது நாட்டின் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நீரிழிவு நோய் நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு பாடசாலை உணவகங்களில் விற்கப்பட வேண்டிய உணவு மற்றும் பான வகைகள் தொடர்பாக அரசாங்கம் குறிப்பிட்ட சில கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 62/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— புகையிரதப் பண்டப் போக்குவரத்தினை வினைத்திறன்மிக்கதாக மாற்றுதல்,— இலங்கையில் புகையிரதச் சேவையானது பண்டப் போக்குவரத்தினை முக்கிய நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளமையாலும், இன்றளவில் புகையிரதச் சேவை அந்நோக்கத்திலிருந்து விலகியுள்ளமையாலும், பண்டங்களை புகையிரதத்தில் ஏற்றிச் செல்வது செலவு குறைந்த முறையாகக் காணப்படுவதனாலும், இதன் நன்மைகள் நாட்டு மக்களுக்கு நேரடியாகக் கிடைக்கப் பெறுவதனாலும், இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் புகையிரத்தின் மூலம் பண்டங்களையும், எரிபொருளையும் ஏற்றிச் செல்வதற்கு அரசாங்கம் உரிய வழிமுறையொன்றை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 63/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— தமது உற்பத்திகளை விற்பனை செய்யும்போது விவசாயிகளுக்கு இழைக்கப்படுகின்ற அநீதியை குறைத்தல்,— தமது விவசாய உற்பத்திகளை விற்பனை செய்யும்போது மொத்த மற்றும் சில்லறை வர்த்தகர்கள் மிகவும் குறைந்த விலையை நிர்ணயிப்பதால் இந்நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுவதாலும், இவ்வுற்பத்திகளை வர்த்தகர்களிடமிருந்து நுகர்வோர் கொள்வனவு செய்யும்போது கூடுதல் விலையை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாலும், ஒரே நேரத்தில் விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் அநீதி இழைக்கப்படுகின்ற இந்நடைமுறையை மாற்றியமைத்து விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் நியாயத்தை வழங்குவதற்காக அரசாங்கம் துரித நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 64/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— முன்பள்ளிக் கல்வியை ஒழுங்குறுத்தும் முறையொன்றை உருவாக்குதல்,— தற்போது இலங்கையில் அமுலில் உள்ள அனைத்து கல்வி வாய்ப்புகளிலும் முன்பள்ளிக் கல்வி மிக முக்கியமானதும், தீர்க்கமானதுமாக காணப்படுவதால், இலங்கையின் முன்பள்ளிக் கல்வியை ஒரு நிறுவனத்தினூடாக ஒழுங்குறுத்தும் முறையொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 65/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— ஏற்றுமதி உற்பத்தியாளர்களுக்கான வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்,— ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு விவசாய மற்றும் வேறு பொருட்களை உற்பத்திச் செய்கின்ற உற்பத்தியாளர்களுக்கு ஏற்றுமதிச் சந்தைக்குள் நுழைவதற்குப் போதுமானளவு வசதிகள், அறிவு மற்றும் நுழைவு வழிகள் இல்லாத காரணத்தினால், அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் பிரதான அங்கங்களாகிய ஏற்றுமதித் துறையில் ஈடுபட்டுள்ள இளம் முயற்சியாளர்களுக்கு தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 66/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— உயர்தரம் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பவியல் பாடத் துறைகளுக்கு இலக்கியப் பாடத்தை அறிமுகப்படுத்தல்,— இலங்கையின் பாடசாலைகளில் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பவியல் ஆகிய பாடத் துறைகளில் உயர் கல்வி கற்கும் மாணவர்களின் இலக்கிய ரசனையை மேம்படுத்துவதற்காக குறித்த துறைகளுக்கு மேலதிகப் பாடமாக இலக்கியப் பாடத்தை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 67/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சைப் பெறும் நோயாளிகளை பராமரித்தல்,— வைத்தியசாலையொன்றில் தங்கி சிகிச்சைப் பெறும் நோயாளிகளின் அருகிலிருந்து நாள்முழுவதும் அவர்களைப் பராமரிப்பதற்காக பொறுப்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டுமென விடுதிக்கு பொறுப்பான அலுவலர் தெரிவிப்பதாலும், அவ்வாறு பராமரிப்பாளர் ஒருவர் இல்லாதபோது கட்டணம் செலுத்தி பராமரிப்பாளர் ஒருவரின் சேவையைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுவதாலும், அத்தகைய பராமரிப்பாளர்கள் நாளொன்றுக்கு ரூ. 3,500 அறவிடுவதாலும், சில நாட்கள் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைப் பெறவேண்டிய நிலை ஏற்படின் அச்செலவு பெருஞ்சுமையாக இருக்கும் என்பதாலும், வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளின் பாதுகாப்பினையும் மற்றும் பராமரிப்பினையும், வைத்தியசாலையில் சேவையாற்றும் பராமரிப்பாளர்கள் ஊடாக பெற்றுக்கொடுப்பதற்கான வழிமுறை ஒன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 68/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— காணி உரிமப் பத்திரங்களையுடையோருக்கு, காணி அறுதி உறுதிப் பத்திரங்களை வழங்குதல்,— நாட்டு மக்களில் கணிசமானோர் தமது காணிகளுக்கு உரிமப் பத்திரங்கள் அல்லது ஸ்வர்ண பூமி போன்ற உறுதிகளையே கொண்டிருக்கின்றனர் என்பதால் அவர்களுக்குரிய உறுதிகளை வழங்குவதற்கு சரியான வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 69/2025

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா,— இலங்கையின் மேல் நிலை நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை அதிகரித்தல்,— வெளிநாட்டு நீதிமன்றக் கட்டமைப்புக்களிலுள்ள பெருமளவான மேல் நிலை நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதுடன் ஒப்பிடும்போது, இலங்கை அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதானது அதை விடக் குறைவாகக் காணப்படுவதால், இலங்கையின் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை 67ஆகவும், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை 65ஆகவும், மேல்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை 63ஆகவும், ஓய்வு பெறும் வயதெல்லைகளை அதிகரிப்பதற்குத் தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 70/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— யாழ்ப்பாணத்தில் சுற்றுலாத்துறைச் சேவைகளை மேம்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல்,— இலங்கையில் யாழ்ப்பாண பிரதேசத்தில் சுற்றுலாத்துறைச் சேவைகளை மேம்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் இந்நாட்டின் சுற்றுலாத்துறை பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும், தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், யாழ்ப்பாணத்தை ஒரு உயிர்ப்பான கலாசாரப் பயண முடிவிடமாக மாற்றமுடியுமென்பதால், யாழ்ப்பாணமும் இலங்கையின் வட மாகாணமும் பிரதான கேந்திர இடங்களாக அங்கீகரிப்பதற்கும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பிரதேசத்தின் ஹோட்டல்கள், உணவு விடுதிகள் மற்றும் சேவை வழங்குனர்களுடன் இணைப்பை ஏற்படுத்தல், உண்மையான சுற்றுலா அனுபவங்களை மேம்படுத்தல், இலங்கையின் வட மாகாணத்திற்கான சுற்றுலாப் பயணிகளின் வருகையினையும் அவர்களின் திருப்தியையும் அதிகரிப்பதற்கான உட்கட்டமைப்பு மற்றும் டிஜிட்டல் இணைப்பு மற்றும் விற்பனையை மேம்படுத்துகின்ற கொள்கைகள் மற்றும் முதலீடுகளுக்காக ஆதரவளிக்கின்ற, பிரதேசத்தில் சுற்றுலா கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்பாட்டாளர்களை வலுவூட்டுகின்ற மற்றும் கலாசார மரபுரிமைகளை மேம்படுத்தும் சுற்றுலாத்துறைச் சேவை வணிகத்தை ஊக்குவித்தல் மற்றும் அவற்றுக்கு வசதியளிப்பதன் மூலமும் யாழ்ப்பாணப் பிராந்தியத்தின் சுற்றுலா கைத்தொழிலின் நிலையான அபிவிருத்தி மற்றும் பொருளாதார விருத்தியை மேம்படுத்துகின்ற அரச-தனியார் பங்காண்மையை மேம்படுத்துவதன் மூலமும் 12 முதல் 18 மாதங்களில் நிலைபேறான பொருளாதாரப் பயன்களை அடைந்துகொள்ளும் இலக்கை நோக்காகக் கொண்டு பிராந்தியத்தின் தொழில் மற்றும் வணிக வாய்ப்புகள் மீது அவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களை கண்காணிப்பதனூடாக யாழ்ப்பாணத்தை மையமாகக்கொண்ட சுற்றுலா தளமொன்றை உருவாக்குவதற்கு ஆதரவளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 71/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— நிலைபேறான இளைஞர் வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கு யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்திலும் நிரந்தர விசேட பொருளாதார வலயம் ஒன்றினைத் தாபித்தல்,— ஒரு நிரந்தர விசேட பொருளாதார வலயமொன்றினைத் தாபித்தலானது அரசாங்கத்தின் பொருளாதார வளர்ச்சியினைத் தூண்டுவதனாலும், உள்நாடு மற்றும் வெளிநாட்டு முதலீட்டினை ஈர்ப்பதனாலும் இளைஞர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பினை உருவாக்குவதனாலும், அவ்வாறான வலயங்களினைத் தாபிப்பதன் மூலம் அரசாங்கத்தினால் தொழிற்துறை விரிவாக்கத்தினை ஊக்குவிக்கவும், திறன் விருத்தியினை மேம்படுத்தவும் மற்றும் தொழில்முனைவினை ஊக்குவிக்கவும் முடியுமென்பதாலும், இதன்மூலம் வேலைவாய்ப்பின்மையினை நிவர்த்திசெய்து யாழ்ப்பாணத்திலும் வட மாகாணத்திலும் மற்றும் ஒட்டுமொத்த நாட்டிலும் நீண்டகால சமூக-பொருளாதார முன்னேற்றத்தினை ஊக்குவிக்க முடியும் என்பதாலும், நாடு முழுவதிலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களினை உள்ளடக்கி, யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்திலும் ஒரு நிரந்தர விசேட பொருளாதார வலயம் (SEZ) தாபிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.72/2025

கௌரவ கந்தசாமி பிரபு,— பால் உற்பத்தியில் தன்னிறைவினை ஊக்குவித்தல்,— நாடு தற்போது பால் இறக்குமதியில் தங்கியிருப்பது கணிசமான அந்நியச் செலாவணி இழப்புக்கு இட்டுச்செல்வதாலும், சிறந்த இன மாடுகளுக்கான, கால்நடைச் சேவைகளுக்கான, தீவனத்துக்கான மற்றும் உட்கட்டமைப்புக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் போன்ற பிரச்சினைகளுக்கு விவசாயிகள் முகங்கொடுப்பதாலும், மேலும், இச்சவால்களைத் தீர்ப்பது உணவுப் பாதுகாப்பினை அதிகரித்து, கிராமியத் தொழில்களை உருவாக்கி, இறக்குமதிகளில் தங்கியிருத்தலைக் குறைப்பதாலும், சிறந்த இன மாடுகளுக்கான அணுகல் மற்றும் கால்நடைச் சேவைகளை மேம்படுத்துவதன் மூலமும் தீவனப் பயிர்ச்செய்கையை விரிவாக்குவதன் மூலமும் விவசாயிகளுக்கான பயிற்சி மற்றும் உட்கட்டமைப்பினை வலுப்படுத்துவதன் மூலமும் பாற் பண்ணை விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலமும் அரச – தனியார் பங்காண்மைகளை ஊக்குவிப்பதன் மூலமும் பாலுற்பத்தி தொடர்பான ஆய்வினை ஊக்குவிப்பதன் மூலமும் பாலுற்பத்தியில் தன்னிறைவினை அடைவதற்காக அரசாங்கத்தினால் தேசிய பால் அபிவிருத்திக் கொள்கை அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும், சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், மாகாண சபைகள் மற்றும் பாலுற்பத்தியாளர் குழுக்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்வதற்காக ஒரு பொறிமுறை உருவாக்கப்பட வேண்டுமெனவும் பாராளுமன்றத்தின் சம்பந்தப்பட்ட குழு இதன் அமுல்படுத்தலைக் கண்காணித்து, மேலதிக நடவடிக்கைகளை விதந்துரைக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 73/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்குச் சுகாதாரத்திற்கான சிறந்த வாய்ப்புகளை வழங்குதல்,— சனத்தொகையில் பெரும்பான்மையானோர் திறந்த இருதய சத்திரசிகிச்சைக்கு உட்படுகின்ற நிலையில், தனியார் துறை ஊழியர்களுக்கு 'ஊழியர் சேமலாப நிதியம்' மற்றும் 'ஊழியர் நம்பிக்கை நிதியம்' ஆகியவற்றுக்கூடாக இலவச வசதிகள் வழங்கப்படும் வகையிலும் அரசாங்க ஊழியர்களுக்கு அல்லது ஊழியரல்லாதோருக்கு அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தில் இருந்து செலவுக்கான முழுத் தொகையும் வழங்கப்படும் வகையிலும் அனைத்து இலங்கையர்களுக்கும் சுகாதாரத்திற்கான சிறந்த வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென இப்பாரளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.74/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— வாரத்தின் கடமை நாட்களில் பிரதான நகரங்களை அண்டியதாக காலை மற்றும் மாலை நேரங்களில் பேருந்து முன்னுரிமைப் பாதை முறையை துரிதமாக நடைமுறைப்படுத்தல்,— பிரதான நகரங்களை அண்டியதாக காலை மற்றும் மாலை நேரங்களில் ஏற்படும் கடுமையான போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாக, காலை மற்றும் மாலை நேரங்களில் பேருந்து முன்னுரிமைப் பாதை முறையை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 75/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— இத்தாலி - இலங்கை இருதரப்பு சாரதி அனுமதிப்பத்திர ஒப்பந்தத்தை இற்றைப்படுத்தல்,— இத்தாலி - இலங்கை இருதரப்பு சாரதி அனுமதிப்பத்திர ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையர்களுக்கு ஏராளமான நன்மைகள் கிடைப்பதனால், அந்த ஒப்பந்தத்தை மீண்டும் இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 76/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— சூட்டிகை வலுசக்திக் கட்டமைப்பையும் சூட்டிகை மின் மானிகளையும் அறிமுகம் செய்தல்,— ஒரு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி வடிவமாக சூரிய மின்சக்தி பெறப்படுவதை ஊக்குவித்தல் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றபோதும் குறிப்பாக, கூரைகளில் பொருத்தப்படுகின்ற சூரியப் படல்களால் பிறப்பிக்கப்படுகின்ற மின்சாரத்தின் அளவை முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தால் வேறுபடுத்திக் கண்டறிய முடியாததால் தேசிய மின்சாரக் கட்டமைப்பை (Grid) சூட்டிகை நிலைக்கு (Smart Grid) கொண்டு வரவும் சூட்டிகை மின் மானிகளை (Smart Meters) அறிமுகம் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.77/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— உணவுகளை சுவையூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் தீங்கு விளைவிக்கும் செயற்கைச் சுவையூட்டிகளைத் தடைசெய்தல்,— இந்த நாட்டிலுள்ள உணவகங்கள் மற்றும் ஹோட்டல்களில் ரைஸ், கொத்து மற்றும் நூடில்ஸ் போன்ற உணவுகளைச் சுவையூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் செயற்கை சுவையூட்டிகள் பல்வேறுபட்ட தொற்றாத நோய்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றதென கூறப்படுவதால் அது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் ஊடாக முறையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு, மேற்படி தீங்கு விளைவிக்கும் சுவையூட்டிகளைத் தடைசெய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 78/2025

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரை புகையிரதப் பாதையை விஸ்தரித்தல் அல்லது மாத்தறையிலிருந்து கல்முனை வரை புகையிரதப் பாதையை விஸ்தரித்தல்,— மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரையான புகையிரதப் பாதை மற்றும் மாத்தறையிலிருந்து கல்முனை வரையான புகையிரதப் பாதையை விஸ்தரிப்பதன் மூலம் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பெருமளவிலான மக்களுக்கு பயன் கிடைப்பதனால், மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரை அல்லது மாத்தறையிலிருந்து கல்முனை வரை புகையிரதப் பாதையை விஸ்தரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 79/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ,— நீர்த்தாமரை செடியின் பரவலை சாதகமான வகையில் கட்டுப்படுத்துதல் மற்றும் அழித்தல்,— நீர்த்தாமரை அல்லது Eichhornia crassipes (Mart.) Solms என்ற அறிவியல் பெயர்கொண்டு அழைக்கப்படும் ஆக்கிரமிப்புத் தாவரம், தற்போது விவசாய நிலங்கள் மற்றும் சதுப்பு நிலங்கள் முழுவதுமாக பரவிச் சென்றுள்ளதாலும், இதன் துரித வளர்ச்சி வேகத்தின் காரணமாக உள்நாட்டுத் தாவரங்களையும் விஞ்சி உயிரியல் சூழல் தொகுதிக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளதாலும், இதன் விளைவாக வண்டல் மண் படிந்து நீர் வழிப் பாதைகள் மற்றும் நீர் வழிந்தோடல் என்பன தடைப்படுவதனூடாக வெள்ளப் பெருக்கு நிலைமைகள் ஏற்படுவதாலும், அன்றாட பாவனைக்கு அவசியமான நீரின் தரம் மாசடைவதாலும் நீர் மின்னுற்பத்திக்கு தடையாக அமைந்துள்ளதாலும், இரசாயன களைக்கொல்லிப் பயன்பாட்டினூடாக அவற்றை அழித்தல், அந்நீரைப் பயன்படுத்தும் நபர்களுக்கு சுகாதாரப் பாதிப்புகளை ஏற்படுத்துவதாலும், இதன் விளைவாக ஏற்படும் நுளம்புக் குடம்பிகளின் பெருக்கத்தின் காரணமாக யானைக்கால் நோய் மற்றும் டெங்கு நோய் போன்றவை பரவி வருவதாலும், இத்தாவரத்தை சாதகமான வகையில் கட்டுப்படுத்துதல் மற்றும் அழிப்பதனூடாக நிலையான தீர்வினை வழங்கும் பொருட்டு அரசாங்கத்தினால் அதற்கேதுவான கருத்திட்ட முன்மொழிவுகளை தயாரித்தல் காலோசிதமானதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 80/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— கொரோனா பெருந்தொற்று நிலவிய காலப்பகுதியில், ஒருதலைப்பட்சமாகவும் வலுக்கட்டாயமாகவும் முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்களை தகனம் செய்தமை தொடர்பாக விசாரிப்பதற்கு ஆணைக்குழுவொன்றை நியமித்தல்,— கொரோனா பெருந்தொற்று நிலவிய காலப்பகுதியில், உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதல்களுக்கு முரணாக ஒருதலைப்பட்சமாகவும் வலுக்கட்டாயமாகவும் தகனம் செய்யப்பட்ட முஸ்லீம் மக்களின் ஜனாஸாக்களின் எண்ணிக்கை, அவ்வாறு தகனம் செய்யப்பட்ட ஆட்களின் பெயர்கள், முகவரிகள் போன்ற தகவல்களை விசாரிப்பதற்கும், இறந்தவர்களின் ஜனாஸாக்களை இவ்வாறு வலுக்கட்டாயமாகத் தகனம் செய்தமைக்கு ஏதுவான பின்னணி மற்றும் வலுக்கட்டாயமாக தகனம் செய்யப்பட்டவர்களின் உறவினர்களின் மனநிலை தொடர்பாக விசாரணை செய்வதற்கும், இதற்கு உடந்தையாக இருந்து வழிகாட்டுதல் களுக்கு முரணாகச் செயற்பட்ட அரசியல்வாதிகள் உள்ளிட்ட அரசாங்க அலுவலர்கள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்கும், ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.81/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— இரசாயனத் திரவியங்களைப் பயன்படுத்தி பழங்களைப் பழுக்க வைப்பதைத் தடுப்பதற்கான வழிமுறையொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பழச்சந்தையில் இயற்கையாகப் பழுத்த பழங்களுக்குப் பதிலாக, இரசாயனத் திரவியங்களைப் பயன்படுத்தி அவற்றை செயற்கையாகப் பழுக்க வைத்து விற்பனை செய்வதாலும், இறக்குமதி செய்யப்படும் பழங்களையும் இரசாயனத் திரவியங்களைப் பயன்படுத்தி செயற்கையாகப் பழுக்க வைத்து விற்பனை செய்வதாலும், இப்பழங்களை பிள்ளைகள் அதிகம் உட்கொள்வதாலும், நேர்மையற்ற வணிகர்கள் இலாபம் ஈட்டும் நோக்கத்தில் நாட்டின் எதிர்காலத்தை அழிவுக்குட்படுத்தி மேற்கொண்டுவரும் இச்செயற்பாட்டை நிறுத்துவதற்கு உரிய வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 82/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— நிறுவனத் தலைவர்களை நியமிப்பதற்கான அளவுகோலாக பிரதான செயலாற்றுகைச் சுட்டியை பயன்படுத்துவதற்கான வழிமுறையை தயாரித்தல்,— அரசாங்கத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களை நியமிப்பதில் மூப்புரிமையை கவனத்திற்கொள்வது போன்றே அவர்களின் பிரதான செயலாற்றுகைச் சுட்டியை (KPI - Key Performance Indicator) ஒரு அளவுகோலாகப் பயன்படுத்துவதற்கான வழிமுறையொன்றை அரச சேவையில் பயன்பாட்டிற்கு கொண்டுவந்து அதற்கேற்ப நிறுவனத் தலைவர்களை நியமிப்பதற்கான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 83/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்குப் பதவிகளை வழங்கும் போது பிரதான செயலாற்றுகைச் சுட்டியைக் கவனத்திற் கொள்ளுதல்,— பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் முக்கிய செயலாற்றுகைச் சுட்டியை (KPI -Key Performance Indicator ) வருடாந்தம் மதிப்பாய்வு செய்து அவர்களுக்குப் பதவிகளை வழங்கும் போது அத்தகைய சுட்டிகளைப் கவனத்திற் கொண்டு பதவிகளை வழங்கும் முறையியலொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 84/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பிரதம நீதியரசர் முதல் நீதித்துறையின் கீழ்நிலை பதவிகள் வரை பதவி வகித்தவர்களை வேறு பதவிகளுக்கு நியமிக்கும்போது அவர்களின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாத்தல்,— பிரதம நீதியரசர் முதல் நீதித்துறையின் கீழ்நிலை பதவிகள் வரை பதவி வகித்தவர்களின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாக்கும் பொருட்டு அவர்கள் அப்பதவிகளை வகித்த காலம் நிறைவடைந்த நாளிலிருந்து குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகளுக்கு அரச சேவை, நியதிச்சட்ட சபைகள், ஆணைக்குழுக்கள், நியாய சபைகள் அல்லது வெளிநாட்டு சேவை (தூதுவர்கள் போன்ற) ஆகியவற்றின் பதவிகளுக்கு நியமிக்கப்படக்கூடாதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 86/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— அரசியல் கட்சிகளைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளுக்குரித்தான சம்பளம், கொடுப்பனவுகள், மற்றும் வாகன அனுமதிப் பத்திரங்களை தமது கட்சியின் நிதியத்தில் வைப்பிலிடுவதை நிறுத்துதல்,— அரசியல் கட்சிகள் தமது கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள், மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்கள் முதலியவற்றை அத்தகைய அரசியல் கட்சிகளுக்கே மீளப் பெற்றுக்கொள்வதானது மக்கள் பிரதிநிதிகள் தங்களது சுயாதீனதன்மையை இழக்கின்றதொரு செயற்பாடாகும் என்பதாலும், இது சனநாயகத்திற்கு கடும் சவாலாக கருதப்படுவதனாலும், இவ்வாறு அரசியல் கட்சிகளினால் மக்கள் பிரதிநிதிகளின் மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்கள் முதலியவற்றை தமது நிதியத்தில் வைப்பிலிடுதல் கூடாதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 87/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர,— போதைப் பொருட்களுக்கு அடிமையாகி உள்ளவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் புனர்வாழ்வளிக்கும் நிலையத்தைத் தாபித்தல்,— இன்றளவில் ஹெரோயின் போன்ற போதைப் பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு காணப்படுவதாலும், போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் குறித்த ஒரு பிரதேசத்தில் மாத்திரமன்றி நாடெங்கிலும் பரந்து காணப்படுவதாலும் இவர்களின் ஊடாக இவ்விடயம் மேலும் பரவி வருவதாலும், போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நிலையங்கள் நாட்டின் ஒருசில பிரதேசங்களில் மாத்திரம் காணப்படுவதானது போதைப் பொருள் பாவனையாளர்களின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவது பாரிய பிரச்சினையாக மாறியிருப்பதாலும், அதற்கு தீர்வினை வழங்கும் பொருட்டு குறைந்தபட்சம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும், அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரு புனர்வாழ்வளிப்பு நிலையமேனும் அமைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 88/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— இலங்கையில் வன விலங்குகளை முகாமைத்துவம் செய்வதற்கு தேசியக் கொள்கையொன்றையும் செயன்முறையொன்றையும் வகுத்தல்,— இலங்கை சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உயிரியல் பல்வகைமை நிறைந்த ஒரு நாடாக கருதப்படுவதாலும், காடழிப்பு, மனிதர்களின் ஆக்கிரமிப்பு காரணமாக சட்ட விரோத வன விலங்கு வர்த்தகம், மனிதர்களுக்கும் வன விலங்குகளுக்குமிடையே அதிகரித்து வரும் மோதல்கள் காரணத்தினால் வருடாந்தம் வன விலங்குகளினதும் மனித உயிர்களினதும் இழப்பு பெருமளவில் இடம்பெறுவதாலும், புதிய கொள்கைகள் மற்றும் திட்டங்களின் மூலம் தேசிய வன விலங்குகள் முகாமைத்துவக் கொள்கையொன்றை வகுத்தல் நிலைபேறான அபிவிருத்தி நோக்கமாக இருப்பதாலும், அதன் மூலம் விலங்குகளின் வாழ்விடங்கள் பாதுகாக்கப்படல், மனிதனுக்கும் வன விலங்குகளுக்கும் இடையிலான மோதல்கள் குறைவடைதல் உள்ளடங்கலாக விவசாயிகளின் பொருளாதார நிலையும் சமூக வாழ்க்கைத் தரமும் மேம்படுவதாலும், அதன் பொருட்டு செயற்படுத்தக் கூடிய நடைமுறைச் சாத்தியமான நவீன கொள்கையொன்றையும் செயன்முறையொன்றையும் வகுத்து செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 89/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— இலங்கையின் விவசாய நிலங்களை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்துதல்,— இலங்கையின் பொருளாதாரத்தின் முக்கியத்துவமிக்க ஒரு துறையாக விவசாயத் துறை காணப்படுவதனாலும், விவசாய நிலங்களில் சுமார் 40 % மாத்திரம் வருடாந்த உற்பத்தி செயன்முறைக்கு பயன்படுத்தப்படுவதனாலும், எஞ்சிய நிலங்கள் உரிய முறையில் திட்டமிடப்படாமை, நீர் வளப் பற்றாக்குறை, தொழிநுட்ப அறிவின்மை மற்றும் நவீனமயப்படுத்தப்படாமை ஆகியன காரணமாக பயன்படுத்தப் படாமையினாலும் உற்பத்திகளின் அளவு குறைவடைவதனால் வருடாந்தம் உணவுப் பொருட்களின் இறக்குமதி மீது பாரிய பணத்தொகை செலவிடப்படுவதனாலும், விவசாய உற்பத்திகளின் வளர்ச்சியை எதிர்வரும் ஒரு சில வருடங்களில் 30% இனால் அதிகரிப்பதற்கும், இதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கும், வணிக விவசாயத்தின் பரவலாக்கத்தை அதிகரிப்பதற்கும் வழிசமைக்கும் வகையில் சகல விவசாய நிலங்களையும் ஆய்வு செய்து நிலத்தின் வகை, பயிர்களுக்கு உகந்தநிலை, நீர் மற்றும் பயிர்ச்செய்கை பற்றிய தகவல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய அடிப்படை தரவுத் தொகுப்பொன்றை அமைப்பதன் மூலம் நாட்டில் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குமாக நிலங்களை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 90/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— யாழ்ப்பாண மாவட்டத்தில் பெருநிலப்பரப்பினை அண்டியுள்ள தீவுகளில் வாழும் மக்களுக்கான கடற் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல்,— யாழ்ப்பாண மாவட்டத்தில் குறிப்பாகப் பெருநிலப்பரப்பினை அண்டியுள்ள நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளில் வாழும் மக்கள் பல தசாப்தங்களாகப் போதிய கடற் போக்குவரத்து வசதிகள் கிடைக்காதவர்களாக இருப்பதாலும், அதன் விளைவாக, அவர்கள் பல மணித்தியாலங்களைக் கடற் பயணத்தில் செலவிடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவதாலும், இவ்வாறான நிலைமையில் நோயாளிகள், கர்ப்பிணிகள், முதியவர்கள், பாடசாலைப் பணியாளர்கள், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கி இப்பயணத்தின் போது பல அபாயநேர்வுகளை எதிர்கொள்வதாலும் "கிராமமொன்றின் அபிவிருத்தி என்பது ஒரு தேசத்தின் அபிவிருத்தியாகும்" என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை என்பதாலும் அம்மக்களுக்களுக்காக நவீன, பாதுகாப்பான, துரிதமான மற்றும் நம்பகமான கடற் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 91/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— தலைமன்னார் — ராமேஷ்வரம் படகுச் சேவையினை ஆரம்பித்தல்,— தலைமன்னார் - ராமேஷ்வரம் படகுச் சேவையை ஆரம்பிப்பதன் மூலம் குறிப்பாக இந்தியாவில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையினை அதிகரிக்க முடியும் என்பதாலும், இதன் மூலம் பொதுமக்கள் குறைந்த செலவில் தமிழ்நாட்டுக்குப் பயணித்து, அமுலிலுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டு நியாயமான விலைகளில் அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்து அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதை இது இயலுமாக்கும் என்பதாலும் தலைமன்னாருக்கும் ராமேஷ்வரத்திற்கும் இடையிலான படகுச் சேவையினை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 93/2025

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— அபிவிருத்தியில் நிலவும் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு தனியானதொரு விசேட அபிவிருத்தி நிதியத்தைத் தாபித்தல்,— வட மாகாணம், கிழக்கு மாகாணம், மொனராகல மாவட்டம் மற்றும் நுவரெலியா மாவட்டம் போன்ற பின்தங்கிய பிராந்தியங்கள் நீடித்து நிலவிய சிவில் முரண்பாடுகளின் தாக்கங்களாலும் வரலாற்று ரீதியான புறக்கணிப்புக்களாலும் தொடர்ந்தும் பல தசாப்தங்களாக கடுமையான பொருளாதார இழப்புக்களுக்கு முகங்கொடுத்து வருவதாலும்; தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் இப்பின்தங்கிய பிராந்தியங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரங்கள் மீது பாரபட்சமான சுமைகள் திணிக்கப்பட்டுள்ளதால் இந்த ஏற்றத்தாழ்வுகள் மேலும் உக்கிரமடைந்துள்ளதாலும்; பொருளாதார ரீதியில் பின்னடைந்த இந்தப் பிரதேசங்களில் ஒப்புரவுமிக்க வளர்ச்சியையும், நிலைபெறுதகு அபிவிருத்தியையும் பால்நிலை வலுவூட்டலையும் மேம்படுத்தும் குறிக்கோளுடன் இக்கரிசனைக்குரிய விடயங்களை நிவர்த்தி செய்வதற்கென தனியானதொரு தேசிய முன்னெடுப்பினைத் தாபிப்பது அவசியமாக இருப்பதாலும்; 250 மில்லியன் டொலர் தொகையினை இலக்காகக் கொண்டு, 10+2 ஆண்டு காலப்பகுதியிலான நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அரசாங்கத்திடமிருந்தும் இருதரப்பு மற்றும் பல்தரப்புப் பங்காளர்களிடமிருந்தும் தனியார் முதலீட்டாளர்களிடமிருந்தும் மனிதாபிமானக் கொடையாளர்களிடமிருந்தும் கிடைக்கின்ற பங்களிப்புகளைத் திரட்டுவதற்கு ஒரு தேசிய அபிவிருத்தி நிதியத்தைத் தாபிப்பதற்கும்; அந்த நிதியினை விவசாயம், மீன்பிடி, மற்றும் குடிசைக் கைத்தொழில் என்பவற்றின் மூலம் கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தைப் புத்துயிர்ப்பிப்பதற்கும், தொழில் வாய்ப்பையும் மற்றும் பெண்களின் சமூகப்-பொருளாதார ஊக்குவிப்பையும் மேம்படுத்துவதற்காக உட்கட்டமைப்பு வசதியை அபிவிருத்தி செய்வதற்கும், முடங்கிக் கிடக்கும் சொத்துக்களை செயலூக்கப்படுத்தி அவற்றை மீளப்பயன்படுத்துவதற்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மைகள் (SME) மற்றும் கூட்டுறவுச்சங்கங்கள் ஆகியவற்றுக்கு உதவுவதற்கும், மீள்புதுப்பிக்கத்தகு சக்தியிலும் மற்றும் ஏனைய வணிக ரீதியில் சாத்தியமான கூட்டுத் தொழில்முயற்சிகளிலும் முதலிடுவதற்கும், திறன் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கும் மற்றும் இளைஞர் யுவதிகளுக்குக் கல்வி கற்பிக்கப் பயன்படுத்தவும்; உள்ளூர் திறனாற்றலை கட்டியெழுப்புவதற்காக முதலீடுகளிலுள்ள சாத்தியமான இடைவெளிகளை ஒழித்தல், நிதிகளின் பயனுள்ள மற்றும் வெளிப்படைத் தன்மைமிக்க பயன்பாடு ஆகியவற்றினை உறுதிப்படுத்தி, தொழில்நுட்ப உதவி வசதியைத் (TAF) தாபிக்க உதவுவதற்கும்; பொருளாதாரச் செயற்பாடுகளிலும் தீர்மானமெடுத்தல் விடயங்களிலும் பெண்களின் பங்கேற்பை ஊக்குவிப்பதற்கு அளவிடக்கூடிய இலக்குகளைக் கொண்டு சகல முதலீட்டுத் துறைகளிலும் பால்நிலையின் உள்ளடக்கும்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கும்; இலங்கையின் பிரத்தியேகமான அபிவிருத்தி, நல்லிணக்கம், நிலைபெறுதகு அபிவிருத்தி என்பவற்றுக்கான ஒரு அவசர தேசிய நடவடிக்கையாக அந்த நிதியம் தாபிக்கப்படுவதைக் கருத்திற்கொள்வதன் மூலம் கருத்திட்டச் செயற்படுத்துகையில் ஒப்புரவுமிக்க பிராந்திய உள்ளடக்கம், வகைப்பொறுப்பு மற்றும் நிலைபேறான அபிவிருத்தி என்பவற்றை உறுதிப்படுத்தும் வகையில் நிதியத்தை ஒருங்கிணைக்கக்கூடிய விதத்தில் அந்தந்த அமைச்சுக்களுக்கும் மாகாண சபைகளுக்கும் உள்ளூர் அதிகாரசபைகளுக்கும் அதிகாரமளிப்பதற்கும் இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 94/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— கண்டல் தாவர சூழல்தொகுதியை பாதுகாப்பதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— சுற்றுச்சூழல் சமநிலைக்கும் கடற்றொழிலுக்கும் மிக முக்கியமானதாக அமையும் கண்டல் தாவர சூழல்தொகுதியைப் பாதுகாக்கும் பொருட்டு வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 95/2025

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— தனியார் பேருந்துகளுக்கு உரிமங்களை வழங்கும் நடைமுறையை ஒழுங்குமுறைப்படுத்துதல்,— மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் தனியார் பேருந்துகளுக்கு உரிமங்களை வழங்கும் பொருட்டு பின்பற்றப்படும் நடைமுறை பெருமளவு ஊழல் நிறைந்ததாக மாறியிருப்பதனால், அந்நிலைமையை தடுப்பதற்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.